விலை சதம் 5

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப்பிள்ளை & சன்ஸ்
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

கொழும்பு பதிப்பு

பக்கங்கள் 4

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா ,, 12-00
1 வருடச் சந்தா ,, 24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு சர்வஜித்து வரு புரட்டாசி 26ஆ ஞாயிற்றுக்கிழமை Colombo, October, 12, 1947 — ஹிஜ்ரி 1366 துல்கஃதா பிறை 26 | இதழ் 131

அராபியலீக்மீது அமெரிக்க செனட்டர் பாய்ச்சல்

14-ம் தேதி பாராளுமன்றத் தலைவர் தேர்தல்

திரு. மொலமுரேக்கு பலத்த எதிர்ப்பு!

திரு. சேன மந்திரி சபை தோற்கடிக்கப்படுமா?

இந்தியன் காங்கிரஸ் பிரதிநிதிகளும் இலங்கை வாழ் இந்தியர் பிரச்னையும்

கொழும்பு, அக். 12

வரும் செவ்வாய்க்கிழமை அக். 14-ம் தேதி பாராளுமன்ற சபையின் முதலாவது கூட்டம் நடைபெறும். அன்று பிரதிநிதிகள் சபையின் 'ஸ்பீக்கர்' (தலைவர்) தெரிவுசெய்யப்படுவார்.

இப்பொழுதுள்ள நிலையில் பழைய அரசாங்க சபையின் முதலாவது ஸ்பீக்கராகிய திரு. ஏ. எப். மொலமுரேக்கும், குருணாக்கல் பிரதிநிதியும் பிரபல நியாயதுரந்தரருமாகிய திரு. எச். ஸ்ரீநிசங்காவுக்கும் இடையில்தான் ஸ்பீக்கர் பதவிக்கு பலத்த போட்டி ஏற்படுமென்று எண்ணவேண்டியிருக்கிறது.

பாராளுமன்ற எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளாகிய சமசமாஜக் கட்சியினர், போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியினர், கமியூனிஸ்ட் கட்சியினர், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர், இந்தியன் காங்கிரஸ் கட்சியினர், சுயேச்சை வாதிகள் யாவரும் திரு. நிசங்காவையே ஆதரிப்பதாகத் தெரிகிறது.

பிரதிநிதிகள் சபைக்கு கவர்னரால் நியமிக்கப்பட்ட ஆறு நியமன அங்கத்தவர்களில் வெள்ளைக்கார அங்கத்தவர் சகலரும் திரு. மொலமுரேயை ஆதரிப்பதாகக் காணவில்லை. முன்பு ஸ்பீக்கராகவிருந்து சிறைச்சாலை சென்றுள்ள ஒருவராகிய திரு. மொலமுரேயை மறுபடியும் ஸ்பீக்கராகத் தெரிவுசெய்வது அறிவின் பாற்பட்ட செயலாகாது என்பதே. ஆங்கிலேய நியமன அங்கத்தவர்கள் கூறும் நியாயமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியதாசனுகிய பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்கா பிரதிநிதிகள்சபை அங்கத்தவர்களின் ஆதரவை திரு. மொலமுரேக்குப் பெறுவதற்காகப் பிரமப்பிரயத்தனங்கள் செய்துவருகின்றார் என அறியப்படுகிறது.

முன்பு திரு. மொலமுரே மீது வழக்கு நடந்தபொழுது, காலஞ்சென்ற ஸேர். பாரன் ஜயதிலகா, திரு. மொலமுரே அரசாங்க சபையில் ஸ்பீக்கர் பதவியையும், அங்கத்தவர் பதவியையும் ராஜிநாமாச் செய்யாது விட்டால் தாம் அரசாங்க சபையினுள் புகமாட்டேன் என்று தமது நண்பர்களுக்குக் கூறியதையும் இப்பொழுது பிரதிநிதிகள் வாக்கைச் சேகரிக்க முயல்கிற திரு. சேனநாயக்காவுக்குச் சில பிரதிநிதிகள் சுட்டிக் காட்டி தாம் திரு. மொலமுரேயை ஆதரித்து வாக்களிக்க மாட்டோம் என்று கூறுவதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் சேனநாயக்கா அரசாங்கத்தைத் தோற்கடித்துத் தங்கள் அரசாங்கத்தை அமைக்கும் பட்சத்தில், சமசமாஜக் கடசிபோன்ற சில எதிர்க்கட்சிகள் இவ் அரசாங்கத்தையும் எதிர்ப்பதற்கு எண்ணமிட்டிருப்பதாகப் பேசப்பட்டு வருகின்றது. ஆயின் கண்டி சிங்களவர் பிரதிநிதிகள் எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை ஏற்படுத்தும் பொழுது ஒத்துழைக்க முன் வந்துள்ளார்கள் என்று திட்டமாக அறியப்படுகிறது.

படத்திருப்புப் பிரதிநிதியாகிய திரு எதிர்மன்ன சிங்கத்தை யூ. என். பீக் கட்சியினர் திரு நல்லியா மூலம் தங்கள் கட்சியில் சேர்த்துக்கொள்ளப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்கின்றனர்.

திரு. எதிர்மன்னசிங்கம் தமது தேர்தலுக்கு முன்பு தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராகத் தம்மை நியமிக்கும்படி கேட்டிருந்தவர். இப்பொழுது தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் அவரைத் தம் பக்கம் சேர்த்துக்கொள்ள ஆயத்தமாயிருக்கின்றனர் என வே திரு. எதிர்மன்னசிங்கம் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினருடன் தான் சேர்ந்து உழைப்பார் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இலங்கைவாழ் இந்தியர் பிரச்னை சம்பந்தமாக இந்திய அரசாங்கம், இலங்கை இந்தியன் காங்கிரஸ் கட்சிப் பாராளுமன்றப் பிரதிநிதிகளைக் கலந்தாலோசியாது இலங்கை அரசாங்கத்துடன் எவ்வித தீர்மானத்துக்கும் வரக்கூடாது என இலங்கை இந்தியன் காங்கிரஸ் காரர் அபிப்பிராயப்படுவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் அறியக்கிடக்கிறது.

வெள்ளத்தின் கீழ் அமிழ்ந்த வீதி

கொழும்பு, அக். 12

இன்று காலை 6 மணிக்கு ஹன்வலை-உறப்பலை வீதி 3 அடி ஆழ வெள்ளப் பெருக்கில் ஆழ்ந்து காணப்பட்டது. மேலும் நீர் பெருகிவருகிறது.

கொடிப் பிரச்னைபற்றி தமிழ்க் காங்கிரஸ்

"எல்லா சாஹியத்தாருக்கும் ஏற்ற கொடியே வேண்டும்"

யாழ்ப்பாணம், அக் 11

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் யாழ்ப்பாண டிஸ்டிரிக்ட் கமிட்டிக் கூட்டத்தில் இலங்கை தேசீயக் கொடி சம்பந்தமாக கீழ்க்கண்டவாறு ஓர் தீர்மானம் நிறைவேறி இருக்கிறது:-

"இலங்கையின் தேசீயக் கொடி இங்குள்ள பல்வேறு சாஹியத்தாராலும் ஏற்கத்தக்கதாகவும் அத்தகைய கொடியை இலங்கையில் உள்ள எல்லா சாஹியத்தாரும் அடங்கிய மகாநாடே தீர்மானிக்க வேண்டும என்றும் இக்கமிட்டி கருதுகிறது.

பார்லிமெண்ட் ஆரம்பத்தின் போதோ அல்லது வேறெச் சந்தர்ப்பத்திலோ சிங்களக் கொடி உபயோகிக்கப்படுவதை யாழ்ப்பாண தமிழர்களின் சார்பில் இந்த டிஸ்டிரிக்ட் கமிட்டி பலமாகக் கண்டிக்கிறது."

தாழ்த்தப்பட்டவருக்கு பிரதிநிதித்துவம்

தமிழ்க காங்கிரஸ் சார்பில் வெற்றியடைந்த பார்லிமெண்ட் அபேட்சகர்கள் தாழ்த்தப்பட்டார் ஒருவரை செனட் சபைக்குத் தெரிவு செய்ய வேண்டும் என்றும் அப்படி தெரிவு செய்யப்படுபவர் தமிழ்க் காங்கிரஸின் ஆதரவாளராக இருக்க வேண்டும் என்றும் அங்ஙனம் ஒருவர் கிடைக்காது போனால் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனையோ, அல்லது திரு. ஆர். சிவகுருநாதரையோ அல்லது இருவரையுமோ தெரிவுசெய்ய வேண்டும் என்றும இடைனேர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி கமிட்டிக் கூட்டத்திற்கு திரு. ஆர். சிவகுருநாதர் தலைமை வகித்தார்.

27 கொலை வழக்குகள்

கொழும்பு, அக். 12

நீதிபதி திரு. ஜெயதிலக முன்னிலையில் வெள்ளிக்கிழமை ஆரம்பமான 4-வது இரிமினல் செஷன்ஸ் கோர்ட்டில் மொத்தம் 58 வழக்குகளிருக்கின்றன. இவைகளில் 27 கொலை வழக்குகள்.

இலங்கை அரசாங்க இந்தியப் பிரதிநிதி

இலங்கைக்கு வந்துள்ளார்

கொழும்பு, அக். 12

இலங்கை அரசாங்கத்தின் இந்தியப் பிரதிநிதியான திரு. எம். டபிள்யூ. எச். டி சில்வா கே. சீ., ஆகாயமார்க்கமாக நேற்று இலங்கைவந்து சேர்ந்தார். சில அதிமுக்கியமான அலுவல்களை ஒட்டியே அவர் இலங்கை வந்துள்ளார் என்று சொல்லப்படுகிறது.

திரிகோணமலையில் கொலை

திரிகோணமலை, அக் 11

கோர்ட்ஸ் ரோடில் பொடி அப்புஹாமி என்பவன் தவசி என்னும் டேவிடை வாளால் வெட்டிக்கொன்றதாகச்சொல்லப்படுகிறது. எதிரி கைது செய்யப்பட்டான். போலிசார் புலன் விசாரித்து வருகின்றனர். (ரு. நி. தந்தி)

மரத்தில் விளையாடிய சிறுவன் மரணம்

காலி, அக். 10

வெளி வத்தையருகே பேழை சாய்ந்துகிடந்த மரத்தின் மீது விளையாடிக்கொண்டிருக்கும் போது எ. எம் எம். மர்க்கான் என்னும் சிறுவன், ரயில்பாதைமீது படிந்திருந்த இரும்பு ரயில் மோதிச் சென்றதால் தூக்கி எறியப்பட்டு காயமடைந்து இரண்டு மணி நேரத்தில் மரணமானன்.

6 தோட்டங்களை சர்க்கார் வாங்குவர்

வெள்ள அகதிகளை குடியேற்றுவதற்கு

கொழும்பு, அக். 12

ஆகஸ்ட் வெள்ளத்தின் கஷ்ட நிவாரணத்திற்கு சர்க்கார் ரூபா 503401-72 இதுவரை செலவு செய்துனர். மொதத்ம் ரூபா 3305192-77 செலவு செய்ய உத்தேசித்திருக்கின்றனர். வெள்ளத்தால அகதிகளான கிராம வாசிகளை கிராம விஸ்தரிப்புத் திட்டப்படி குடியேற்றி புதிய கிராமங்களை உண்டாக்க சர்க்கார் மத்திய மாகாணத்தில் 6 தோட்டங்களை வாங்குவார்கள் என்று தெரிகிறது. அவை பின்வருமாறு:—

1. கம்பளையில் மரியவத்தை ரப்பர் தோட்டம் (1050 ஏக்கர்)
2. பொட்குல்ஹென ரப்பர் தோட்டம் (18 ஏக்கர்)
3. கிஹிம்பியாடான தேயிலை தோட்டம் (44 ஏக்கர்)
4. மங்கஹென, குலபன, மாவத்துவ தோட்டம (31 ஏக்கர்)
5. நாவலப்பிட்டிய, ஆஷ்பர்ன் தோட்டம் (129 ஏக்கர்)
6. ரம்புக்பிட்டிய, கிரளகதர நிலம் (60 ஏக்கர் தேயிலை

புதுப்பிக்கப்பட்டுள்ளது என்றே கூறவேண்டியிருக்கிறது.

இந்த இராணுவ ஆலோசத்திரியை கூடியரோக ஆலோசத்திரியாக்குவதா அல்லவா என்பது சம்பந்தமாக சென்ற வருடத்தில் நியமிக்கப்பட்ட கமிட்டி ஏகமனதான அபிப்பிராயத்தைக் கூறுதபடியால் சுகாதாரக் காரியக் கமிட்டியினர் அதைப் பொது ஆலோசகத்திரியாக்கவேண்டுமென்று தீர்மானித்தனர். என்றாலும் அவர்கள் இதை காலாகாலத்தில் கூடியரோக ஆலோசத்திரியாக்கும் எண்ணத்தை அடிப்படையில் கொண்டிருந்தனர் என்பது புலனாகிறது.

இவ்வாலோசத்திரியில் 360 படுக்கைகள் இருந்தபோதிலும் 50 நோயாளர்தான், இதுபொது ஆலோசத்திரியாக்கப்பட்ட பின் ஒரே காலத்தில் சிகிச்சை பெற்று வந்தார்கள் எனக் கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறை ஆஸ்பத்திரி பிரச்னை

இரு கட்சியாரும் ஒற்றுமையான முடிவுக்கு வருவது நலம்

காங்கேசன்துறைப் பிரதிநிதியின் முயற்சி

கொழும்பு, அக். 12

சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. பண்டார நாயக்கா, காங்கேசன்துறை கூடியரோக ஆலோசத்திரியிலுள்ள நோயாளர்களை காங்கேசன்துறை இராணுவ ஆலோசத்திரிக்கு மாற்றுவதை தாம் அவ்விஷயம் சம்பந்தமாக நேரடியாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவிற்கு வரும் வரைக்கும் நிறுத்தி வைக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

கூடியரோக ஆலோசத்திரியை பொது ஆலோசத்திரியாக்கவேண்டுமென்றும், இராணுவ ஆலோசத்திரிக்கு கூடியரோக ஸ்தர்களை அனுப்பக்கூடாதென்றும், சென்ற சில நாட்களாக சுகாதார மந்திரி காரியாலயத்தில் தந்திகளும் மகஜர்களும் வந்து குவிந்து கொண்டேயிருக்கின்றன.

இந்தப் பழைய இராணுவ ஆலோசத்திரியை கூடியரோக ஆலோசத்திரியாக்கவேண்டுமென்று பலர் கேட்பதாலும் வேறும் பலர் அதைப் பொது ஆலோசத்திரியாக்கவேண்டுமென்றும் கேட்பதாலும், காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், கே. ஸி., அவர்கள் இந்த இருதரப்பினரிடையேயும் ஒற்றுமை நிலவச்செய்ய முயற்சிகிறார் என அறியப்படுகிறது.

இரு பகுதியாரும் ஏதாவது ஒற்றுமையான அபிப்பிராயத்தைத் தங்களிடையே பெற்றுக் கொள்ளாவிட்டால் திரு. செல்வநாயகம், இருதரப்பினரது நியாயத்தையும் சுகாதார மந்திரிக்கு எடுத்துக்கூறி சுகாதார மந்திரியையே நீதி வழங்கும்படி கேட்டுகொள்ளுவதாகவும், தமது தொகுதியிலுள்ள கிராமச் சங்கங்களுக்கும், இதர சங்கத் தலைவர்களுக்கும், மற்றும் பிரபலஸ்தர்களுக்கும் இதுசம்பந்தமாக அனுப்பிய ஒரு நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. செல்வநாயகம் இன்று சுகாதார மந்திரியைப் பேட்டி காண்பார் என அறியப்படுகின்றது.

சென்றவருடத்தில் நடந்த காங்கேசன்துறை ஆஸ்பத்திரிப் பிரச்னை மீண்டும் இப்பொழுது

ஹிட்லர், ஹிரோஹிடோக்களுக்கு ஒப்பிடுகிறார்

பாலஸ்தீன வெடிகுண்டும் ஐக்கிய தேச ஸ்தம்பிதமும்

7 நாடுகளின் அடுத்த அராபிய லீக் கூட்டம் அக்டோபர் 13-ம் தேதி

வாஷிங்டன், அக். 10

பாலஸ்தீன பிரச்னைபற்றி இன்று அமெரிக்கா தனது அபிப்பிராயத்தை உலகுக்குத் தெளிவுபடுத்தும். அமெரிக்கா பாலஸ்தீன பிரிவினையை ஆதரிக்கிறதா இல்லையா என்பது பற்றிக் கவலையில்லை என்றும் அதனால் இப் பிரச்னையை இரு சாராருக்கும் திருப்தியளிக்கும் படியாக எவ்விதம் தீர்த்து வைப்பது என்பதற்றியே ஐக்கிய தேச வட்டாரத்தில் கவலையேற்பட்டிருக்கிறது.

அராபிய லீக் மீது ஆத்திரம்

பாலஸ்தீன எல்லையில் அராபிய தருப்புகள் வந்து குவிகின்றன என்ற செய்தி அமெரிக்க காங்கிரஸ் அங்கத்தினர்களிடையே கலக்கத்தையுண்டு பண்ணியிருக்கிறது. அவர்கள் யூதர்களுக்கு ஓர் சாம்ராஜ்யத்தை பாலஸ்தீனத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று நெடுங்காலமாக வற்புறுத்தி வருகிறவர்கள். இது சம்பந்தமாக செனட் சபையின் குடியரசுக் கட்சி அங்கத்தினர் ஒவன் புரூஸ்டர் என்பவர் பின்வருமாறு தெரிவித்தார்:-

அராபிய லீக்கின் நடவடிக்கை ஐக்கியதேச ஸ்தாபனத்தை வலியச் சண்டைக்கிழுப்பது போல இருக்கிறது. ஹிட்லர், ஹிரோஹிடோ தொல்லைகளை ஒழித்துக்கட்டிய தேசங்கள் இந்த அராபிய லீக்கின் மிரட்டலுக்குப் பின்வாங்கப் போவதில்லை. இந்தப் பிரச்னையை ஐக்கிய தேச ஸ்தாபனம் ஒன்று வெற்றிகரமாகச் சமாளிக்க வேண்டும்; இன்றேல் ஐக்கிய தேச ஸ்தாபனமே இல்லாது ஒழிய வேண்டும்.

வெளியேற பிரிட்டன் உதவி

லண்டன், அக். 10

எகிப்து, சிரியா, லெபானன் ஆகிய அராபிய நாடுகளின் தருப்புகள் பாலஸ்தீன எல்லைகளில்வந்து குவிகின்றன என்ற செய்தியால் பிரிட்டன் பாலஸ்தீனதை விட்டு வெளியேற வேண்டுமென்று தான் செய்த தீர்மானத்தை மாற்ற விரும்பவில்லை. அது பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறியே தீரும். அராபியரும் யூதரும் சமரசமாகப் போக வேண்டுமென்பதும் அவர்கள் ரத்தம் சிந்தலாகாதென்பதுமே பிரிட்டனின் விருப்பம்.

அராபிய நாடுகளின் முடிவு

நேற்று பெய்ரூத்தில் அராபிய லீக் காரியதரிசி அசாம் பாஷா பின்வருமாறு தெரிவித்தார்:- இங்கு எகிப்து, சிரியா, லெபானன், யேமன், டிரான்ஸ ஜோர்டான், ஈராக், சவூதி அரேபியா ஆகிய 7 அராபிய நாடுகளின் பிரதிநிதிகள் கூடி, பிரிட்டன் வெளியேறினால் பாலஸ்தீனத்தைப் பாதுகாக்க ராணுவ, பொருளாதார, ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தீர்மானித்திருக்கின்றன

யூதர் ஸ்தாபன அறிக்கை

லண்டனிலுள்ள பாலஸ்தீன யூதர் ஏஜன்ஸி என்றஸ்தாபனம் கீழ்க்கண்டவாறு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது:- அராபியர்கள் பலாத்காரத்தால் பாலஸ்தீனத்தைக் கைப்பற்ற முயற்சிதால் நாங்கள் தீவிரமாக எதிர்ப்போம் பிரிட்டன் வெளியேறி பாலஸ்தீனத்தில் புதிய நிர்வாகம் ஏற்படுமவரை வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து பாலஸ்தீனத்தின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்ய ஐக்கிய தேச ஸ்தாபனம் முன வருமென்று கருதுகிறோம், அராபியர்கள் அதற்குள் பாலஸ்தீனத்தைக் கைப்பற்ற முயன்றால் உலகிலுள்ள யூதர்கள் அனைவரும் ஒன்று திரண்டு அதை எதிர்க்க அவர்களுக்கு உரிமையுண்டு.

பிரான்ஸிலுள்ள யூதர் விடுதலை ஸ்ரு கமிட்டி வெளியிட்ட அறிக்கையில், ஜெருசலம் கிராளட் முப்தி வருகையே ஹிட்ரு பாலஸ்தீனதத்ன் மீது போர் தொடுக்க ஆரம்பித்து விட்டதாகக் கருதப்படும்என்று தெரிவித்திருக்கிறது.

கௌதமாலா தாக்குகிறது

வாஷிங்டன், அக். 10

இன்று ஐக்கிய தேச பாலஸ்தீன கமிட்டியில் விவாதம் நடைபெற்ற போது கௌதமாலா தேசத்துப் பிரதிநிதி டாக்டர் கிராண்டாங் ஜெருசலேம் கிராண்ட முப்தியைப் பலமாகத் தாக்கிப் பேசினார்.

13-ம் தேதி மற்றொரு கூட்டம்

பெய்ரூத் நகரிலிருந்து கடைசியாகக் கிடைத்த செய்தி பின் வருமாறு தெரிவிக்கிறது:-

பாலஸ்தீன அராபியருக்கு உதவிக்கு நடவடிக்கை எடுப்பது பற்றி அராபிய லீக்கின் தீர்மானத்திற்கு டிரான்ஸ ஜோர்டான் முற்றிலும் ஆதரவளிக்கிறது. அடுத்த அராபிய லீக் மகாநாடு அக்டோபர் 13-ம் தேதி யன்று மன்னர் அப்துல்லா மஜிலவாசத் தலைநகரான அம்மன் நகரில் நடைபெறும்- இப்பொழுது மன்னர் அப்துல்லாவைச் சந்தித்துப் பேசி மேலும் எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி முடிவு செய்யப்படும்

அமெரிக்கா ரஷியா மௌனம்

நியூயார்க், அக். 10

பாலஸ்தீன கமிட்டியில் பாலஸ்தீனதத்ன் மீது அராபிய லீக் செய்துள்ள தீர்மானம் பற்றி அமெரிக்காவோ அல்லது ரஷியாவோ அபிப்பிராயம் தெரிவிக்காது மௌனம் சாதித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 செட்டியார் தெரு, கொழும்பு. போன்: 3411.

சர்வதேச தபால் ஒப்புரட்டாசி மீ 26ல் ஞாயிற்றுக்கிழமை

குடும்ப சொத்தா?

இலங்கையின் புதிய பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்கா பழைய அரசாங்க சபையில் விவசாய மந்திரியாக இருந்தார். இப்பொழுது பிரதம மந்திரியே மற்றும் இதர மந்திரிகளை அவரவர் யோக்யதைக்குத் தக்கபடி நியமிப்பது. ஆகவே திரு. சேனநாயக்கா, தன் மைந்தன் திரு. டட்லி சேனநாயக்காவை விவசாய மந்திரியாக நியமித்துள்ளார்.

தந்தையாகிய ஒருவன் இறக்கும் தறுவாயில் தன் சொத்துக்களைத் தன் அருமருந்தன்ன புத்திரனுக்கு மரண சாதனம் எழுதுவது வழக்கம். தந்தை இறந்ததும் மகன் சொத்துக்களை உபயோகப்படுத்துவதும் தொன்று தொட்டுள்ளதாகும். ஆனால் தந்தை மரண சாதனம் எழுதிய பின்பு உயிருடன் வாழ்ந்தால், தந்தையின் விருப்பு வெறுப்பின் படியே, மைந்தன் காரியங்கள் செய்து வருவதை நாம் அனுபவ சாத்தியமாகக் கண்டிருக்கிறோம்.

தகப்பன் திரு. சேனநாயக்கா உயிருடன்தான் இருக்கிறார். அவர் விவசாய மந்திரியாக சென்ற 16 வருடகாலங்களாக கடமையாற்றிய பொழுது நாட்டின் விவசாயச் செல்வங்களைப் பெருக்குவதாகக் கூறி தீமைகள் பல செய்ததுமுண்டு. விவசாய மந்திரி பதவிக்கு வேறொருவரை நியமித்தால் அத்தனை தீச் செயல்களும் அம்பலமாகி விடும். அதுவுமல்லாமல் தான் நினைத்தபடி கருமங்கள் செய்ய முடியாது. ஆகவே தன் மைந்தனுக்கு மந்திரிப் பதவியை மரண சாதனம் எழுதியது வியப்பல்ல ஆனால், இந்த விவசாய மந்திரிப் பதவி, திரு. சேனநாயக்கா குடும்பத்தின் முது சொத்தா என்பதைத்தான் நாம் கேட்க விரும்புகிறோம்.

திரு. டி. எஸ். சேனநாயக்கா மந்திரியாக இருந்தபொழுது நிலமற்றவர்களைக் குடியேற்றுவது என்னும் போர்வையில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை நாடுகடத்துவதற்காக உருளவெள்ளித் தோட்டத்தை அரசினர் தோட்டமாக்கினர். அதேபோன்று மேரிமவுண்ட், மாஒயா ஆகிய இரு தோட்டங்களையும் அரசாங்கச் செலவில் கிரையத்திற்கு வாங்கினர். இம்மூன்று தோட்டங்களிலும் நிலமில்லாத சிங்களத் தொழிலாளர்களை குடியேற்றினர்கள். பெற்ற பலன் என்ன? ஏமாற்றம்தான்! "சிங்களத் தொழிலாளர்கள், தோட்டங்களிலுள்ள கடுமையான வேலைகளைச் செய்ய இன்னும் சரியாகப் பழகிக்கொள்ளவில்லை" என்று உருள வெள்ளித் தோட்டம் சம்பந்தமாகக் கூறும் நிலக் கமிஷனரின் அறிக்கையே இவ் ஏமாற்றத்தை நிதர்சனமாக்குகின்றது. அத்துடன் அங்கு குடியேறிய சிங்களத் தொழிலாளர்களிற் பலர் வெளியேறி விட்டதாகவும் நாம் அறியக்கிடக்கின்றது.

நிலபுலமற்றவர்களைக் குடியேற்றிக தொழில் கொடுப்பதற்காக விவசாய மந்திரியின் உத்தரவின்பேரில் அரசாங்கத்தால் வாங்கப்பட்ட பன்னிரண்டு தோட்டங்களில், ஒன்பது தோட்டங்களில்தான் ஒரு அளவில இலாபம் பெறக்கூடியதாயிருந்ததென்றும் நிலக் கமிஷனர் கூறியுள்ளார்.

இலாபம் ஒன்பது தோட்டங்களில் உண்டு என்று கூறிய நிலக் கமிஷனர் ஒரு முக்கியத்தைதான் அறவே மறந்துவிட்டார். எவ்வளவு இலாபத்தை அரசாங்கம் இத்தோட்டங்களால் பெற்றிருக்கின்றது என்பதைக் கூறவில்லை. இதை வேண்டுமென்றுதான் மறைத்து வைத்திருக்கின்றாரோ தெரியவில்லை.

யூ. என். பீக் கட்சியினரின் மார்ச்சுமாத அறிக்கையில் நன்றாகப் பண்படுத்தப்பட்ட தோட்டங்களை அரசாங்கம் பெற்று, நிலமற்ற கிராமச் சிங்களவரைக் குடியேற்றி அவர்களையே அத்தோட்டங்களை ஐக்கிய சங்க முறைகளில் நடாத்திவர விட்டுவிடவேண்டும்என்று திரு சேனநாயக்கா கூறியிருக்கின்றார். இக் கொள்கையை நிலக்கமிஷனர் ஆதரிப்பதாகத் தெரியவில்லை. இதை ஆதரியாததற்குக் காரணத்தையும் நிலக் கமிஷனர், சில மாசங்களுக்கு முன்பு மாகாண அரசாங்க ஏஜண்டுகளுக்கும் உதவி ஏஜண்டுகளுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருக்கிறார். தேச வருமானப் பெருக்கத்தில் அக்கறை உள்ளவர்கள் எவரும் நன்முகப் பண்படுத்தப்பட்ட தோட்டங்களை அரசாங்கம் வாங்குவதற்கு சிபார்சுசெய்யக் கூடாது என்று வெளிப்படையாக நிலக் கமிஷனர் சுற்றறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இவ்வறிக்கையின் பின்பு, இப்பொழுது விவசாய மந்திரி முதுசொத்தைப் பெற்ற திரு. டட்லி சேனநாயக்கா குண்டசாலைத் தோட்டத்தை அரசாங்க விவசாயப் பள்ளிக்கூடமும் மாட்டுப்பட்டியாக்கவும்முனைந்திருக்கிறார். இத் தோட்டத்தில்தான் உலகதலை சிறந்த கொக்கோவைப் பெறுகின்றோம். ஒரு ஏக்கர் நிலத்தில் பதினொன்றரை அந்தர் கொக்கோ இங்குதான் பெறப்படுகின்றது. உயர்ந்த வருவாயைக்கொடுக்கும் இத்திறமான தோட்டத்தை இன்னுமொரு உருளவெள்ளியாக்குவதன் மர்மந்தானென்ன? தந்தைசொற்படி மைந்தன் நடப்பதுதானே! வேறு யாருக்காவது விவசாய மந்திரிப் பதவியைக் கொடுத்திருந்தால், தாம் நினைத்தபடி திரு சேனநாயக்கா செய்யமுடியாது என்பதை அறிந்தே, தம முரட்டுக்கொள்கைகளை நடைமுறையில் கொண்டுவரக் கூடிய தன் மைந்தனை நியமித்துள்ளார். ஆனால் தேச மக்களுக்கு இதால் எவ்வளவு கஷ்டம் நஷ்டம் என்பதை திரு. சேனநாயக்கா உணர்ந்திருக்கிறாரா? அதுதான் கிடையாது.

கீழ்நாட்டின் இருதயம் இந்தியா

அது பெரிய வல்லரசாவது நிச்சயம்

காந்திஜியின் அமெரிக்க நண்பர் அபிப்பிராயம்

பம்பாய், அக் 8

"தற்சமயம் இந்தியாவில் குழப்பமும் கலகமும் ஏற்பட்டிருப்பினும், அதுவே கிழக்கு உலகம் முழுவதற்குமே துடித்துக் கொண்டிருக்கும் இருதயமாக இருக்கும். இந்தியா ஒருபெரிய வல்லரசாவதும்நிச்சயம்" என்று மகாத்மா காந்தியின் அமெரிக்க நண்பரும் பக்தருமாகிய டாக்டர்ஜான்ஹோயின்ஸ்ஹோல்ம்ஸ இன்று மாலையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிய போது குறிப்பிட்டார். ஸ்ரீ ஹோல்ம்ஸ் மேலும் கூறினார்:-

அமெரிக்க மேற்கத்திய நாடுகள் ஆசைத்திற்கும் துடிப்புள்ள இருதயமாக இருப்பதுபோல இந்தியா கிழக்கு உலகின் இருதயமாக இருக்கிறது. இந்த இரு நாடுகளில் ஒவ்வொன்றும்தமது பிரதேசங்களில் மகத்தான அரசியல் பொருளாதார சக்திகளாக விளங்குகின்றன.

சமீபத்தில் உலகில் இரு மிக முக்கியமான சம்பவங்கள்நிகழ்ந்தன. ஒன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அஸ்தமனம்; மற்றொன்று அமெரிக்கா திடீரென்று உலகிலேயே பெரிய வல்லரசானது. இதுவரைபிரிட்டனுக்கு இருந்த ஸ்தானத்தில் இப்பொழுது அமெரிக்கா அமர்ந்து கொண்டது."

தமிழரசுக் கழக பிரசாரம்

சென்னை, அக். 6

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் இம் மாதம் 10-ம் தேதி முதல் 17-ம் தேதி வரையில் திருச்சி மதுரை கோயில்பட்டி, துறையூர் ஆகிய பல இடங்களுக்கும் சென்று சுதந்திர சோஷியலிஸ்ட தமிழ் குடியரசு அமைப்பது பற்றி பிரசாரம் செய்வார்.

மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் பலகலவ்ரிகளிலும் தொழிலாளர் கூட்டங்களிலும் பேசுவார்.

ஜீவசக்தி

சிதம்பரம், அக். 9

இன்று காலை 12 மணிக்கு அண்ணமலை சர்வகலாசாலையின் 17 வது பட்டமளிப்பு விழா சீனிவாச சாஸ்திரியார் ஹாலில் சென்னை கவர்னர் தலைமையில் நடைபெற்றது.

சென்னை கவர்னரும், பிரதம மந்திரி ஒ. பி. ராமசாமி ரெட்டியாரும் இன்று காலை சிதம்பரம் வந்தார்கள். ரயில் வே ஸ்டேஷனில் மகத்தான வரவேற்புகள் அளிக்கப்பட்டன. சர்வகலாசாலை வெகு அழகாகஅலங்கரிக்கப்பட்டிருந்தது.

பட்டமளிப்பு விழா மண்டபத்தில் கவர்னரையும், பிரதம மந்திரியையும், ராஜா சர் அண்ணமலை செட்டியார், ஸ்ரீ எம். ரெத்தினசாமி (உப-அத்தியட்சகர்) ரிஜிஸ்டிரார் ஸ்ரீ ஜி. டி. நந்தகோபால் ஆகியோர்கள் வரவேற்றார்கள்.

மொத்தம் பட்டம் வாங்கிக் கொண்டவர்கள் 228-பேர்கள், அதில் நேரில் வாங்கிக்கொண்டவர்கள் 125 பேர்.

பின்னர் பிரதம மந்திரி ஸ்ரீ ஒ. பி. ராமசாமி ரெட்டியார் தன் பட்டமளிப்பு விழா பிரசங்கத்தை தமிழில் நிகழ்த்தினார்.

பிரதமர் ஸ்ரீ ரெட்டியார் தமது பிரசங்கத்தில் சிதம்பரத்தின் பெருமையைக் கூறிவிட்டு சர்வ கலைகளிலும் இந்தியா எவ்விதம் புராதன காலம் தொட்டு சிறப்புற்றிருக்கிறது என்பதை எடுத்துக்கூறினார். ஞானிகளும்,மதாசாரியர்களும், கவிகளும், சிற்பிகளும், வான சாஸ்திரிகளும் என்னென்ன அழிவிலா அற்புதங்களை செய்திருக்கிறார்கள் என்பதை சொன்னார். பண்டைக் காலத்திலிருந்த 64 கலா ஞானங்கள் இன்னவை என்பதையும், நம் முன்னோர்கள் அனுஷ்டித்த 32 தர்ம முறைகள் யாவை என்பதையும் விளக்கிப் பேசியதாவது:-

சிதம்பர மகிமை

பிறவிப் பெரும் பயனை நாம் அடைதல் பொருட்டு ஆனந்தத் தாண்டவம் புரியும் சபா நாயகரான நடராசமூர்த்தி இந்தச் சிதம்பரத்திலே எழுந்தருளியிருக்கிறார். இங்குதான் ஆம் வாராஜிகளால் பாடப்பெற்ற கோவிந்தராஜப் பெருமானும் எழுந்தருளியிருக்கிறார்.

இங்குதான் பதஞ்சலி, வியாக்ரபாதர் முதலிய யோக தபோதனர்கள் கடவுளைத் தொழுது முக்தியை யடைந்தார்களென்றும், இங்குதான் சைவ சமயாசாரியர்களான அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், நந்தனர் முதலிய நாயன்மார்கள் பக்தி பரவசத்தினால் தேவாரங்களைப் பாடினார்களென்றும்இங்குதான் திருமந்திரத்தை யளித்த திருமூலரின் சமாதி விளங்குகிறதென்றும், இப்பெருமை வாய்ந்த இந்த க்ஷேத்திரத்தைத் தெரிந்தெடுத்து, இங்கு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்திய செட்டியார் அவர்களுக்கும், நண்பர்களுக்கும் நமது வந்தனம் உரித்தாகுக.

பண்டைக் காலத்தில் நமது தேசத்தின் நிலை

நம்மிற் பலர் இன்றும் நமது பண்டைய நாகரிகத்தின் தன்மை இத்தகையது என்று அறியாமலிருக்கின்றனர். ஆகையால், பல்லாயிர ஆண்டுகளாக நமது நாடு நாகரிகத்திலும், கலை வளர்ச்சியிலும் சரித்திர விஞ்ஞான ஆராய்ச்சி நிலையிலும் லௌகீக பரமார்த்திக வாழ்விலும் மேன்மை யடைந்திருந்த தென்பதைக் காட்டக் குறள் மேற்கோள் காட்டி, குருகுலங்கள், ரிஷிகள் மாபெருங் காவியங்களைப்பற்றிப்பேசினார்.

இலக்கியம், சங்கீதம், பாஷா பிவிருத்தி, ஞான ஐசுவரியம் ஷண்மத ஸ்தாபனம் செய்த சித்தர்கள் தேசியக் கவி பாரதி பற்றி எடுத்துக் கூறிவிட்டு, "இவைகளை நோக்குங்கால் நம் தேசத்தின் பண்டைய உன்னத நிலைமை, நமக்கு வியப்பை உண்டுபண்ணவில்லையா? நமது பழம் பெருமையைப் பாராட்டி மட்டும் பெருமையடைய வேண்டும் என்பதற்காக நான் இவற்றைச் சொல்லவில்லை. மறை வாகப் பழங் கதைகள் நமக்குள்ளே பேசுவதில் பெருமையில்லை என்பதை நானறிவேன். ஆயினும், நமது இன்றைய தாழ்ந்த நிலையை நோக்கி நாம் என்றும் இத்தாழ்ந்த நிலையிலேயே இருந்தாகாகத் தப்பிப்பிராயம் நம்மில் பலரிடை நிலவியுள்ளதை நீக்கவே இவற்றைக் குறிப்பிட்டேன். நாம் நடந்துகொள்ளும் முறை இத்தகைய பெரியோரின் சந்ததிகள் நாம் என்பதற்குத் தகுதியானவாறு இருக்க வேண்டும் என்பதற்காகவும் குறிப்பிடுகிறேன்

கல்வி என்பது என்ன?

நீங்கள் எல்லோரும் இப்பல்கலைக் கழகத்தில் கூடியிருப்பது கல்வி கற்றற் பொருட்டு; ஆகையால், கல்வி என்ன என்ற அடிப்படையையே ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம்.

கல்வி என்பது என்ன? மனிதனிடத்தில் பொதிந்துகிடக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி. அறிவு மனிதனிடத்தில் இயல்பாக அமைந்திருப்பது. அது புறத்தே இருந்து வருவதொன்றன்று. ஒரு மனிதன் கற்கிறான் என்றால், தன்னிடம் இயல்பாக அமைந்த அறிவைக்கண்டு கொள்ளுகிறான் என்றுதான் சொல்ல வேண்டும். ஆராய்ந்து பார்க்குமிடத்து, எல்லையற்ற அறிவுக்களஞ்சியமாகிய ஆன்மாவை ஆவிர்ப்பவித்திருக்கும் அறியாமைத் திரையை நீக்குவதே கல்வியாகும். கல்லினுள்ளே நெருப்பு இருப்பதைப் போல உள்ளதனுள்ளே அறிவு அமைந்திருக்கின்றது. கல்லை ஒன்றோடொன்று மோதும்போது நெருப்பு உண்டாகின்றது. புறத்தே தோன்றும் குறிப்பின் மூலம் அறிவு வெளியாகின்றது. சகல அறிவும் ஆற்றலும் நம் உள்ளத்தே இருக்கின்றன. எல்லாவிதமான சக்திகள், இயற்கை ரகசியங்கள், ஆற்றல்கள் என பலவாறுகக் கூறும் அனைத்தும் மனத்துள்ளே இருக்கின்றன. மனத்தை ஒருமுகப்படுத்தி அதை அறிய முயற்சி செய்யும் பொழுது ஞானம் வெளிப்படுகின்றது.

திருத்தி அமைக்க வேண்டும்

நமது தற்போதைய கல்வி முறையை எடுத்துக் கொள்வோம். இப்பொழுது பள்ளிக் கூடங்களிலும், கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் கொடுத்துவரும் கல்வி எந்த விதமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்பதைப் பார்ப்போமானால், அது தேசத்தின் பண்புக்கும், நாகரீகத்துக்கும், சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைக்கப்படவில்லை. அதைச் சரியாக திருத்தியமைக்க வேண்டிய நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இதுவரையில் நம்முடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த அந்நிய அரசாங்கத்தை நீக்கி இப்பொழுது நாம் சுதந்திர வாயிலை அடைந்திருப்பதால் அதைச் சரியாக பயன்படுத்திக் கொண்டு நம் தேசத்தில் இருக்கிற ஜன சமூகத்தின் பொருளாதார, சமூக ஆத்மீக முன்னேற்றத்திற்கு தகுந்த முறையில் நடைபெறுவதற்கு நாம் ஏற்பாடு செய்யவேண்டும்.

கல்வி முறை மாறவேண்டும்

மகாத்மா காந்தி, அடிப்படை கல்வியில், புஸ்தகம் இல்லாமல் குழந்தைகளுக்குத் தொழில்கள மூலமாக உடலுக்கும், உள்ளத்திற்கும், மூளைக்கும் சம்பந்தம் ஏற்படுத்தி ஐம்புலன்களையும் பண்படுத்தி அதன் மூலமாக பொருளும் அருளும் உண்டாக்கப் பாடுபட்டார். அதை நமது தேசத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பரப்பி, வருங்கால சந்ததிகளான குழந்தைகளை நாம் சீர்திருத்திக் கொண்டு வர வேண்டும் இப்பொழுது நமது கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் கொடுக்கப்படும் கல்வியானது, மனிதனுக்குப் பல துறைகளில் முன்னேற்றம் அடையும்படியான முறையில் தகுந்த வசதியுடனும், அனுகுணமாயும் கொடுக்கப்படாமையால், மனிதனை அரசாங்க உத்தியோகத்திற்கு மாத்திரம் பிரயோசனப்படும்படி நடத்துவதால் எங்கு பார்த்தாலும் சண்டை சச்சரவுகள்உண்டாகி உத்தியோக வேட்டையினால் மனிதனை மனிதன் துவேஷிக்கவும், ஒரு ஜாதியை மற்றொரு ஜாதி துவேஷிக்கவும் ஏதுவாகிறது. இந்த நிலை தேசத்திலிருந்து மாறவேண்டுமென்றால், கலாசாலைகளிலும், சர்வகலாசாலைகளிலும், பல தொழில்களிலும், பல கலைகளிலும் முன்னேற்றம் அடையும்படியான முறையில், அரசாங்கம் கல்வியை மாற்றியமைக்கவேண்டும். அம்மாதிரி மாற்றியமைக்கும் கல்வியானது ஜன சமூகத்திற்கு விவசாயம், வர்த்தகம் கைத்தொழில்கள், இயந்திரத் தொழில்கள் இன்னும் மற்ற துறைகளில் பயன்படக்கூடிய வாறு அனுகுணமாக இருக்க வேண்டும் இன்று கலாசாலைகளில் மாணவர்கள் படிக்கும் படிப்பினால் ஜன சமூகத்திற்கு விசேஷ பயன் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் ஏழைகளிடத்திலிருந்து வாங்கும் வரியிலிருந்து கோடிக்கணக்கான பணம் கலாசாலைகளுக்கு மான்யங்களாக அளிக்கப்பட்டு வருகின்றன.

கிராம வாசிகளுக்கு சேவை செய்க

கிராமங்களிலிருக்கும் ஏழைகள் உண்ணஉணவிலாமலும், உடுத்த உடையில்லாமலும், இருக்க இடமில்லாமலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கலாசாலைப் படிப்பு முடிந்து பட்டதாரிகளாக நீங்கள் உலகத்தில் உங்களுடைய காரியங்களைச் செய்ய முற்படப்போகிறீர்கள் எந்த ஏழைகள் கொடுத்த வரியின் ஒரு பகுதியால், பட்டதாரிகளாக ஆனீர்களோ. அந்த ஏழைக் கிராமவாசிகளுக்கு முதலில் தொண்டு செய்ய வேண்டியது உங்கள் கடமை. இளைஞர்களாகிய நீங்கள் இதை மனதில் வைத்துக் கொண்டு தேசத்திற்குச் சேவை செய்ய முற்பட்டால், நமது தேசமும் மற்ற தேசங்களைப்போல் முன்னேற்றம் அடைய முடியும். நம் தேசம் பல துறைகளிலே முன்னேற்றம் அடைய வேண்டும். விவசாய சாஸ்திரத்தில் பயிற்சி பெற்றவர்களும், இன்னும் பல துறைகளிலே பயிற்சி பெற்றவர்களுமாக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தேவையாய் இருக்கின்றார்கள். அதேமாதிரி தொழில் முன்னேற்றத்திற்கு பல தொழில் நிபுணர்கள் நமக்குத் தேவை அம்மாதிரி நிபுணர்களுக்கு நல்ல பயிற்சியளித்து பல தேசங்கள் அபிவிருத்தியடைந்திருக்கின்றன. அந்த அபிவிருத்தியை நம் தேசத்திலும் புதுப் புது ஆராய்ச்சி சாலைகளை ஏற்படுத்தி அதன் மூலமாக ஆராய்ச்சி செய்து தேச முன்னேற்றத்துக்குத் தகுந்த முறையில் தொழிலியமைத்து தேசத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நமக்குத் தேவை.

நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு "டைனமோ" போன்றவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. உங்கள் சக்தியை விரு தாவாக விரையம் செய்யாமல பல பயிற்சிக் கழகங்கள் இம்மாதிரி ஏற்படுத்தி 5 வருஷங்களுக்குள் நம் நாட்டின் கலவித்துறையையே பூராவாக மாற்றியமைத்து ஜன சமூகத்தின் அறிவுச் சுடர்களாக விளங்கிக் கொண்டு தொழில், விநியோகம், பாதுகாப்பு, அறிவு, அபிவிருத்தி முதலியவைகளைச் செவ்வனே நடைபெற ஒழுக்கத்தை அடிப்படையாகக்கொண்டு ஆண்மையுள்ள வருங்கால சமுதாயத்தை உருவாக்க மகாத்மா காந்தி அவர்களின் கனவை நனவாக்க நீங்கள் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

கடைசியாக, சங்கரரின் ஞானமும், ராமானுஜரின் பக்தியும், மத்வாசாரியரின் சேவையும், மகா வீரரின் அஹிம்சையும், விவேகானந்தரின் மேதையும், மகாத்மா காந்தியின் சத்திய விரதமும், சேவா உணர்ச்சியும் உங்களிடத்தில் உண்டாகி உங்களுக்கு அருளும், ஆண்மையும் அளிக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ததும்பும் 'டைனமோ'க்கள்

சுதந்திர இந்தியாவின் மாணவர்கள்

பண்டைத் தமிழர்கள் கல்வி முறையின் லட்சியம்

சிதம்பரம் அண்ணமலை சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் சென்னை பிரதமர் தமிழிலே நிகழ்த்திய சொற்பொழிவு

[தமிழ் நாட்டின் சர்வ கலாசாலையான சிதம்பரம் அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் சுதந்திர இந்தியாவின் சென்னை மாகாணப் பிரதம மந்திரியான ஓமந்தூர் ஸ்ரீ ராமசாமி ரெட்டியார் பண்டைக் கல்வி முறையின் சிறப்பையும் தற்காலக் கல்வி முறையின் சீர்கேட்டையும் எதிர்காலக் கல்வியமைப்பையும் பற்றி சாங்கோபாங்கமாக எடுத்துரைத்து தமிழிலே நிகழ்த்திய பதினேழாவது பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவின் சாராம்சம்:]

மைசூர் காங்கிரஸ் தலைவர்-திவான் பேட்டி

2-15 மணி நேரம் சம்பாஷணை

150 காவல் கைதிகள் விடுதலை

பெங்களூர், அக். 9

இன்று மாலை சமஸ்தான காங்கிரஸ தலைவர் ஸ்ரீ கே. ஸி. ரெட்டி மைசூர் திவானை பேட்டி கண்டார். 2 மணி 15 நிமிஷங்கள்வரை சம்பாஷணை நடந்தது. இன்று மாலை திவான் அனுப்பிய அழைப்பிற் கிணங்கவே ஸ்ரீ ரெட்டி அவரைச் சந்தித்தார்.

இன்றிரவு 9 மணிக்கு சுமார் 150 காவல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். குண்டன் ஹல்லி நஞ்சப்பா. தும்கூரைச் சேர்ந்த ஸ்ரீ. எம் வீ ராமாராவ், மைசூர் அசெம்பிளி மெம்பர் ஸ்ரீ தாஸ ஆகியவர்களும் மற்றும் பலரும் விடுதலை செய்யப் பட்டனர்.

அரசியல் முட்டுக்கட்டையைத் தீர்க்க தன்னுடன் பேச்சு வார்த்தை நடத்த வருமாறு திவான் ராமசாமி முதலியார் அனுப்பியிருந்த அழைப்பை மைசூர் சமஸ்தான காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. கே. ஸி. ரெட்டி இன்று ஏற்றுக் கொண்டார். உடனடியாகவே இந்த சம்பாஷணை ஆரம்பமாகும்.

சத்தியாக்ரஹம் எவ்வளவு தூரம் வெற்றியடைந்துள்ளதென்பதைப் பற்றியும் மகாராஜாவின் பிரகடனத்தைப் பற்றியும் காங்கிரஸ் காரியக் கமிட்டி ஆலோசித்தது. இத்துடன் கூட திவானின் அழைப்பு பற்றியும் ஆலோசித்தது.

நீண்டநேரம் விவாதம்நடந்த பிறகு காங்கிரஸ தலைவர் திவானைச் சந்திக்க வேண்டுமென்று காரியக் கமிட்டி தீர்மானித்து விட்டதாக 4-30மணிக்கு காரியதரிசி அறிவித்தார்.

காரியக்கமிட்டி கூட்டத்திற்கு விடுதலையான எல்லா மெம்பர்களும் பிரசன்னமாயிருந்தனர். மாஜி சமஸ்தான காங்கிரஸ தலைவர் ஸ்ரீ எச் ஸி. காலப்பா, இன்று விடுதலையான மேல்சபை காங்கிரஸ கட்சித் தலைவர் ஸ்ரீ டி. மாரியப்பா ஆகியோரும் வந்திருந்தனர்.

சத்யாக்ரஹம் ஆரம்பிக்கு முன் திவானுடன் பேச்சுவார்த்தைகள் நடந்தபோது திவான் திடீரென்று பாதி சம்பாஷணையில் நிறுத்திவிட்டதால் அவருடன் சம்பாஷணைகள் நடத்துவதால் எவ்வித பலனும் ஏற்படாது என்ற அபிப்பிராயம் பலமாக இருப்பதாகத் தோன்றுகிறது.

காங்கிரஸில் எல்லா கோரிக்கைகளும் அளிக்கப்பட்டால் மொழிய சத்தியாக்ரஹம் நிறுத்தப்படமாட்டாது என்று ஸ்ரீ கே ஸி ரெட்டி உத்தர வாதம் அளித்த பின்னரே கூட்டம் கலைந்தது.

பாக்கிஸ்தானுக்கு நிதி உதவி

அமெரிக்க முதலாளிகளுடன் சம்பாஷணை

50 கோடி டாலர் முதல் போட தயாராம்

லண்டன், அக். 9

பாக்கிஸ்தானில் தொழில் மயமாக்கத் தயார் என்று டொனலி ராக்பெல்லர் தலைமையில் சில அமெரிக்க தொழில் முதலாளிகள் அறிவித்திருப்பதாக அதிகார பூர்வமாகத் தெரிகிறது. சுமார் 50 கோடி டாலரை முதலீடாகப் போட அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

பூர்வாங்க சம்பாஷணை நடத்த அத்தொழில் முதலாளிகளின்பிரதிநிதிகள் பாக்கிஸ்தான் சர்க்கார் பிரதிநிதிகளைப் போனவாரம் சந்தித்தனர். சம்பாஷணை தொடர்ந்து நடக்கிறது. கனரக தொழில்கள் மட்பாண்டம், ரேயான், சணல், மைக்கா, எண்ணெய், ஜவுளி உற்பத்தி முதலிய பல தொழில்களை முதலீடு மேற்குபாக்கிஸ்தானில் ஆரம்பிக்க அமெரிக்கா உத்தேசித்திருக்கிறது.

ஜனுஜின்னா சம்மதித்தால் பாக்கிஸ்தானின் தொழில் வசதிகளை அவர்கள் ஆராய்ந்து வெளியிடுவர். சர்க்கார் நடத்தும் தொழில்களுக்குக் கடன் கொடுக்கவும் அவர்கள் விருப்பத்துடன் இருக்கிறார்கள்.

இந்தியாவில் ரசாயன பொருள்கள் உற்பத்தி

ஜெர்மானியர் உதவி செய்யத் தயாராம்

கயா, அக். 7

உலக உணவுமகாநாட்டிற்கு விஜயம் செய்த இந்தியப் பிரதிநிதிகள் கோஷ்டியின் தலைவரான ஸ்ரீ. அனுக்ரக நாராயண் சின்ஹா பாடனுவுக்குத் திரும்புகையில் இங்கு வந்து சேர்ந்தார். அவர் பத்திரிகை நிருபர்களிடம் கூறியதாவது:- நிலக்கரி முதலிய பொருள்களிலிருந்து ரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு இந்தியருக்கு உதவி புரிய பல ஜெர்மன் ரசாயன கம்பெனிகளின் டைரக்டர்கள் இந்தியாவுக்கு வர விரும்புகிறார்கள்.

இந்திய பொருளாதார மகாநாடு

ராஜாஜி ஆரம்பித்து வைப்பார்

கல்கத்தா, அக். 7

டிசம்பர் மாதம் 22, 23, 24-ம் தேதிகளில் கல்கத்தாவில நடைபெறவிருக்கும் இந்திய பொருளாதார மகாநாட்டை மேற்கு வங்க கவர்னர் ஸ்ரீ. ஸி ராஜகோபாலாச்சாரியார் ஆரம்பித்து வைப்பார்.

பாரதி மண்டப திறப்பு விழா

நாகர்கோவில, அக். 9

எட்டயாபுரத்தில் பாரதி மண்டப திறப்பு விழாவை முன்னிட்டு திருவாங்கூர் தமிழ் நாட்டைச்சேர்ந்த 18 தொண்டர்கள் நேற்றிரவு இங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர். இவ் விழாவை மேற்கு வங்காள கவர்னர் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் திறந்து வைப்பார்.

தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ

மதுரை, அக். 5

அக்டோபர் இரண்டாவது வாரத்தில் மதுரையில் நடைபெறவிருந்த தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் 2-வது மகாநாடு மந்திரிகள் டாக்டர். பி. சுப்பராயன், எம் பக்தவத்சலம் முதலியவர்களுக்கு அசெம்பிளி கூட்டம் இருப்பதை முன்னிட்டு நவம்பர் 2-வது வாரத்துக்கு மாற்றி வைக்கப்பட்டிருக்கிறது என்று காரியதரிசி ஸ்ரீ அய்யாவு எழுதுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய ஐரோப்பாவின் நிலைமை

அமெரிக்கர் மீது பொதுஜன வெறுப்பு

சமூக ஜனநாயகக் கொள்கை தோல்வி

ரஷியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பிய திரு. டாங்கே கருத்து

பம்பாய், அக் 10

"ஐரோப்பாவில உள்ள வல துசாரி சமூக ஜனநாயக வாதிகள் தோல்வியடைந்துவிட்டார்கள். கூட்டுறவு, விவசாயம், முக்கிய தொழில்களை தேச உடமை ஆக்குதல போன்ற ஜனநாயகத் திட்டத்தை அமுல் நடத்தக் கமியூனிஸ்டுகளுடன் ஒன்று சேர மறுத்துவிட்டார்கள். இதனால்தான் கமியூனிஸ்டுகள் தாம ஒன்று சேர்ந்து ஆங்கில-அமெரிக்கப் பிற்போக்குச் சக்திகளை எதிர்க்க முன் வரும்படி ஏற்பட்டது."

இந்தியக் கமியூனி ட் கட்சியின தலைவரும் ஐரோப்பாவில் இருந்து சமீபத்தில் திரும்பிய வருமான எஸ். ஏ. டாங்கே கமியூனிஸ்ட் சர்வதேச பீரோ என்ற 9 கமியூனிஸ்ட் கட்சிஸ்தாபனம் நிறுவப்பட்டதைப் பற்றிப் பேசுமபோது மேற் கண்டவாறு ஒரு பேட்டியின் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும்கூறியதாவது:-

"யுததத்தின் பின மலர்ந்து வளர்ந்த புதுதம் புது ஜனநாயக ஐரோபபிய அரசாங்கங்களை தலைமைட்டமாக்கஆங்கில-அமெரிக்க ஏகாதிபத்தியம முயல்கிறது. அதற்குத் துணைபுரிகிறார்கள் வலதுசாரி சமூக ஜனநாயகவாதிகள். உதாரணத்திற்கு பிரெஞ்சு சோஷியலிஸ்டுகள் பிடாலட் அரசாங்கம கமியூனிஸ்டுகளை விலக்கிவைக்கததுணை புரிகிறார்கள். அதன்மூலம பிரான்ஸில ஒரு "குட்டி அமெரிக்காவை" கட்டி அமைக்க முயலும் டி காலுக்கு பேருதவி புரிகிறார்கள்.

"இத்தாலியிலே அமெரிக்க கம்பெனிகள் அங்குள்ள எல்லா வர்த்தகங்களையும் கடளிகரம் செய்துவிட்டன. மேல் ஐரோப்பாவிலே அமெரிக்க ஆடசியே நடக்கிறது. அங்குள்ள மக்கள் முன் நாஜிகளை வெறுத்தது போல் இன்று அமெரிக்கர்களை வெறுக்கிறார்கள்."

மார்ஷல் பிளானுக்கு ஒரு மாற்றுகவா கமியூனிஸ்ட் அணி லம் தலைதூக்குகிறது என்று கேட்கப்பட்ட கேள்விக்கு "இல்லை" என்று பதிலளித்தார் டாங்கே, பிரிட்டிஷ மக்களுக்கு அமெரிக்கக் கடன் என்னசெய்தது என்பதைக் கண்டுவிட்டனர் ஐரோப்பியர். அதனால அமெரிக்காவை அவர்கள சந்தேகிக்கிறார்கள்.

"பொது மகனின் பாஷையில் மார்ஷல் பிளான்" அமெரிக்க வர்த்தகக் கம்பெனிகளின் சாமான் வாங்கும் சிட்டை என்றே கருதப்படுகிறது. திட்டத்தின் ரூபம் இதுதான். ஏற்றுமதிகள்மூலம் கடனுளியாக்கி விட்டு ஒவ்வோர் நாட்டிலும் அரசியல ஆதிக்கத்தை நிறுவுவதுதான். அமெரிக்கா தன் பொருளாதார நெருக்கடியை தீர்த்துக்கொள்ளக் கண்டு பிடித்த வழி இது. மேற்கு ஐரோப்பிய நாட்டு அதிகார வர்க்கமும் தங்கள் ஆதிக்கத்தை மக்களின் விருப்பத்திற்கெதிராக நிலைநாட்ட இந்த அமெரிக்கத் திட்டத்தை உதவிக் கருவியாகக்கொண்டுவிட்டது. ஐரோப்பிய புனருத்தாரணம் சாத்தியமாக அரசாங்கம ஜனநாயக ரீதியானல்தான்முடியும் வேறு வழி இதற்குக் கிடையாது.

சர்வ தேசத்திலுள்ள கமியூனிஸட் கட்சிகளையும் புதிய பீரோ அரவணைத்துக்கொள்ளுமா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு "சில சமயம் அப்படியே ஆகலாம்; ஆனல் இன்று ஐரோப்பிய பிரச்னையே நெருக்கடியான பிரச்னை. ஆகவே அவுகேயே இது ஆரம்பித்திருக்கிறது" என்று திரு டாங்கே பதிலளித்தார்.

இந்தோனேஷியா தகராறு

ரஷியா கருத்துக்கு அமெரிக்கா, பெல்ஜியம் எதிர்ப்பு

நியூயார்க், அக். 9

பாதுகாப்பு கவுன்ஸில் கூடத்தில் ரஷியப் பிரதிநிதி பேசியபோது, மூவர்களின் தீர்ப்புக்கு முன்னதாக ஹாலந்தும் இந்தோனேஷியாவும் ஜூலை 20-ம் தேதி இருந்த இடத்திற்குத் தத்தம் துருப்புகளைப் பின் வலித்துக்கொளள வேண்டுமென்று கோரினர். அமெரிக்கப்பிரதிநிதி இக்கோரிக்கையை ஆட்சேபித்தது அதனல் அபாயம் நேரிடுமென்றும் அவ்விதஉத்தரவு பிறப்பிக்க போதிய சாடசியமில்லையென்றும் தெரிவித்தார். பெல்ஜியப் பிரதிநிதியும் ஆட்சேபித்தார்.

பொம்மை அரசுகள்

பட்டேவியா, அக். 9

இழக்கு சுமத்ராவில் தற்காலிக சர்க்கார் நிறுவ டச்சு சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். இழக்கு இந்தோனேஷியாவுக்குப் புதிய மந்திரி சபை அமைக்குமபடி இழக்கு இந்தோனேஷியா தகவர் சோக்வடி தற்காலிக பிரதமருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

(ராய்ட்டர்)

இந்தோனேஷிய குடியரசு

ஆப்கானிஸ்தானமும் லெபானனும் அங்கீகாரம்

பட்டேவியா, அக். 10

இந்தோனேஷிய குடியரசு சர்க்காரை ஆப்கானிஸ்தான மும லெபானனும் அங்கீகரித்துவிட்டன.

இந்தோனேஷியாவில் முதலாவது இந்திய ஸதானதிபதியாக நியமிக்கப்பட்ட திரு. ராகவன் தனது மூன்று உதவி அதிகாரிகளுடன் இனகு வந்து சேர்ந்தார். ஹாலந்து, இந்தியா, இழக்கிந்திய தீவுகள் இவை மூன்று நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட விமான ஒப்பந்தப்படி இரு இந்திய விமானங்கள் இந்தோனேஷியாவில் பறந்துசெல்லமுடியும். (ராய்ட்டர்)

சீன உள்நாட்டு யுத்தம்

கமியூனிஸ்ட்டுகளின் முஸ்தீபு

ஷாங்கை, அக். 9

வடகிழக்கில் நிறுவப்பட்டிருக்கும் பலமான சீன சர்க்கார் நானுவத்தை முறியடிக்க பல மிகுந்த கமியூனிஸ்ட் படைகள் மஞ்சூரியாவில மூன்று இடங்களில வந்து குவிகின்றன. அதேசமயம் மற்றப் பகுதிகளிலுள்ள சீன சர்க்கார் ரானுவதைச் சிக்கவைப்பதறகு கமியூனிஸ்ட் படைகள் மற்றும் 5 மாகாணங்களிலும் ஏராளமான அளவில் படையெடுத்திருக்கின்றன. (ராய்ட்டர்)

இதன் பயனக அமெரிக்க அயல்நாட்டுக்கொள்கை பாதிக்கப்படுமா என்ற கேள்விக்கு 'இப்போ அமெரிக்கர் ஒரு காரியத்தைத் துணியுமுன் ஒருதரத்திற்கு இரண்டுதரம் யோசிப்பார்கள். நவம்பரில் நடக்கும் அயல் நாட்டு மந்திரிகள் மகாநாட்டில் மந்திரிமார் புத்தி சுவாதீனத்துடன் சர்ச்சை செய்யவேண்டும். இல்லா விட்டால் அடியோடு மகாநாடு முறிந்தொழியும்!" என்று அவர் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

தென் ஆப்பிரிக்க வாழ்வு

நிறத்துவேஷ நரகலோகம்

நியூயார்க், அக். 9

ஐக்கிய தேச தர்மகர்த்தா கமிட்டியில் இந்தியா பிரதிநிதி சர் மகாராஜா சிங மேற்கு ஆப்பிரிக்க பிரச்னைபற்றி விவாதித்த போது தென்னுப்பிரிக்காவின் வாழ்க்கை நிறத துவேஷத்தை அடிப்படையாகக் கொண்டது என்றும் இன்னும் சில வருடங்கள் அது நரகலோகமாக இருந்து வருமென்று அஞ்சுவதாகவும் தெரிவித்தார். தர்மகர்த்தா ஒப்பந்தத்தை தென்னுப்பிரிக்காசமர்ப்பிக்கவேண்டுமென்ற இந்தியாவின் கோரிக்கையை உக்ரைன், உருகுவே, ஹெயிட்டி பிரதிநிதிகள் ஆதரித்தனர். (ராய்ட்டர்)

ரஷியாவுக்கு உளவு சொன்னன்

கானடா தொழிலாளிக்கு தண்டனை

ஒட்டாவா, அக். 10

ரஷியாவுக்கு உளவு சொன்னதாக வெடிமருந்து இலாக்காவைச் சேர்ந்த ஒரு தொழிலாளிக்கு 4 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

(ராய்ட்டர்)

பர்மா கொலை வழக்கில் ஒரு எதிரி, சர்க்கார் சாட்சி

ரங்கூன், அக். 9

பர்மா மந்திரிகள் கொலை வழக்கின் 9 எதிரிகளில் ஒரு எதிரி சர்க்கார் தரப்பில் சாட்சி கூற முன்வந்ததால் அவருக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

ரூர் நிலக்கரி சுரங்கங்கள்

தேசிய மயமாக்க அமெரிக்கா ஆட்சேபனை

போஸ்டன், அக். 10

ரூர் பிரதேசத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கங்கள் தனிப்பட்ட முதலாளிகள் ஆதிக்கத்தில் தான் இருக்கவேண்டுமென்றும் அவைகளை சர்க்காரே கைப்பற்றி நடத்துவதான கோரிக்கையைக் கொண்டுவருவது உசிதமில்லையென்றும், ஜெர்மனிக்கு சொந்த சர்க்கார் ஏற்பட்டபிறகு அதைப்பற்றி யோசிக்கலாமென்றும் அமெரிக்கா கருதுகிறது. (ராய்ட்டர்)

இந்திய பிரதிநிதியிடம் இந்தோ-சைனு முறையீடு

நியூயார்க், அக். 9

இந்தோ-சைனுவை பிரான்ஸ் ஆக்கிரமிப்பதை ஆட்சேபித்து ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் வாதாடும்படி சில வியட் நாம் குடியரசுப் பிரதிநிதிகள் இங்குள்ள இந்தியா பிரதிநிதி கோஷ்டியிடம் முறையிட்டார்கள். அவர்களிடம் அனுதாபம் காட்டுவதாகவும், இவ்விஷயம் இந்திய சர்க்கார் மூலம் தெரியப்படுத்த வேண்டும் என்றும் அவர்களுக்கு இந்தியா பிரதிநிதிகள் பதிலளித்தார்கள்

இந்தோ--சைனுவில் பிரான்ஸ் இறுதி யுத்தம் தொடங்கியதுபற்றி பாரிசுக்கு ஒரு தகவலும் கிடைக்கவில்லையாம்.

(ராய்ட்டர்)

டுப்ளே சிலை நீக்கப்படுகிறது

சந்திரநாகூர், அக். 9

இந்தியாவில் பிரெஞ்சுஏகாதிபத்தியத்திற்கு அடிகோலியவரான டுப்ளேயின் உருவச்சிலையை சந்திர நாகூரிலிருந்து நீக்குவதென்று சந்திரநாகூர் முனிசிபல் கவுன்ஸில் தீர்மானித்தது. சந்திரநாகூரின் அருந்தவப்புதல்வரும் இந்திய சுதந்திரத்திற்காக மரித்த தியாகியுமான கன்னலால் தத்தருக்கு உருவச்சிலை அமைப்பதெனறும கவுன்ஸில் மேற்கொண்டு தீர்மானித்தது.

கல்கத்தாவிலுள்ள பிரெஞ்சு ஸதானிகரிடம் டுப்ளே சிலையை ஒப்படைக்கவும் கவுன்ஸில் முடிவு செய்தது.

புதிய பட்ஜெட் உருவாகிறது

சொகுசுப் பொருட்கள் மீது வரி ஏற்படுமா?

கொழும்பு, அக். 10

மந்திரி சபையின் வேண்டுகோள் பிரகாரம் நிரந்தரக் காரியதரிசிமார் 1947-48-ம் வருட பட்ஜெட்டைத் தயாரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இப்புதிய பட்ஜெட்டின்படி புதிய வரிகள் எதுவும் ஏற்படாதென்றும் சொகுசுப் பொருட்கள் மீதுள்ள வரி மட்டும் சில சமயம் உயர்த்தப்படலாம் என்றும் தெரிகிறது.

இந்த பட்ஜெட்டின் பிரகாரம் 1947-48 வருமானம் மொத்தம் 44 கோடி 15 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் என்று தெரிகிறது. அக்டோபர் தொடக்கம மொத்தம் 4 மாத செலவு வகைக்கு 14 கோடி 65 லட்சத்து 17 ஆயிரம் செலவாகும் என்று அனுமானிக்கப்படுகிறது இந்தக் கணக்குப் பிரகாரம் 1947-48க்கு 43 கோடி 90 லட்சம் ரூபாய் சாதாரண அரசாங்கச் செலவுகளுக்கே போய்விடும். இச்செலவுகளில் நாட்டில் பெரிய அரசாங்கச் செலவுகளைச் சேர்க்கவில்லையென்றும் மிக ஜாக்கிரதையாகவே பணம் செலவிடப்பட வேண்டும் என்றும் எண்ணப்படுகிறது.

கீழ்மாகாண உத்தியோக மாற்றங்கள்

மட்டக்களப்பு, அக். 9

கீழ்மாகாண கவர்ன்மெண்ட் ஏஜண்ட் திரு. ஆர். எச். டி மாண்டர்ஸ வடமத்திய மாகாண கவர்ன்மெண்ட் ஏஜெண்டாக மாறிச் செல்வார் என்று தெரிகிறது.

காலியாகும் கீழ் மாகாண ஏஜெண்ட் பதவியை திரு. டி. ஆர் குணவர்த்தனு ஒரு மாதம் கழித்து ஏற்றுக்கொள்வார் என்றும் அதுவரை ஊவா மாகாண கவர்ன்மெண்ட் ஏஜெண்டே கீழ்மாகாண நிர்வாகத்தையும் கவனிப்பார் என்றும் அறியப்படுகிறது.

மட்டக்களப்பு ஸதலஸ்தாபன நிர்வாக உதவிக் கமிஷனர் திரு. டி. ராஜேந்திரன் கொழும்புக்கு மாற்றப்பட்டு விட்டதால் திரு. எச். இஸமாயில் அவரது ஸதானத்தைப் பூர்த்தி செய்வார் என்று தெரிகிறது.

பாக்கிஸதான் ரானுவக் கப்பல்

திரிகோணமலையில் தங்கிச் சென்றது

திரிகோணமலை, அக். 11

சிட்டகாங்குக்குச் செல்லும் பாக்கிஸ்தான் ரானுவக் கப்பல் "அவுட்" திரிகோணமலைத் துறைமுகத்தில் தங்கிச் சென்றது. திரிகோணமலையில் உள்ள முஸ்லிம்கள் அக்கப்பலிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு விருந்து கொடுததார்கள்.

அக்கப்பலின் தலைவரான லெப்டினெட் ஸ்ட். எச் ஜாபரி ஒரு பாக்கிஸதான் கொடியை திரிகோணமலையில் உள்ள முஸலிம்களுக்கு வழங்கினர். இக்கொடி "அவுட்" என்னும் ரானுவக் கப்பலில் பாக்கிஸதான் சுதந்திரம் பெற்ற தினத்தன்று பறக்கவிடப்பட்டதாகும்.

தென் ஆப்பிரிக்காவுக்கு ரேடியோ டெலிபோன்

கொழும்பு, அக். 10

தென் ஆப்பிரிக்கா, வட தென் ரொடேஷியா தென் மேற்காப்பிரிக்கா முதலிய இடங்களுக்கு இப்போ டெலிபோன் மூலம் சம்பாஷித்துக்கொள்ளலாம். சம்பாஷணை 3 நிமிஷமோ அதற்குள்ளோ; ஆனல் ரூபாய் 50 செலுத்த வேண்டும். அதற்கு மேல் ஒவ்வோர் நிமிஷத்திற்கும் ரூபாய் 16-50 வீதம் செலுத்த வேண்டும்.

புதிய வர்த்தக டைரக்டர்

கொழும்பு, அக். 11

புடவைக் கட்டுப்பாட்டதிகாரியாக கடமை ஆற்றும் திரு. எம்.எப்.டி.எஸ.ஜயரத்ன தமது மேற்படி கடமையோடு வர்த்தக டைரக்டராகவும் பிரயாண பீரோ டைரக்டராகவும நியமிக்கப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாண நீதிஸ்தலச் செய்திகள்

யாழ்ப்பாணம், அக். 9

அக்டோபர் 15-ம் தேதி தொடக்கமாக திரு. ஜி. எஸ். டி. ஏ. டி. சில்வா பருக்ஹித்துறை கோர்ட்டுக்கும் போய் வருவதை நிறுத்தி யாழ்ப்பாணத்தின் நிரந்தர டிஸ்டிரிக்ட் நீதிபதியாக கடமை ஆற்றுவார். தற்போது மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரிக்கப்படும் எல்லா "கோர்ட் ஒவ் ரிக் இயூபெஸ்ட்" வழக்குகளும அவர தமுன்னிலையிலேயே இனி விசாரிக்கப்படும் என்று தெரிகிறது.

ஊர்காவற்றுறை கோர்ட்டிலும் யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட்டே வழக்குகளை விசாரிப்பார். இக் கோர்ட்டில் வாரத்தில் சில குறிப்பிட்ட நாட்களிலேயே விசாரணை நடந்து வருகிறது.

மல்லாகத்தில் தினசரி கோர்ட் விசாரணை நடைபெறும் என்றும் அறியப்படுகிறது.

கமஞ் செய்யச் சென்றவரை தாக்கினர்கள்

சாவகச்சேரி, அக். 9

இளிநொச்சி வாசிகளாகிய செல்லையா, முத்தையா, ஆம்வான் என்னும் மூவர்கள் இளிநொச்சிக்குக் கமஞ்செய்யச் சென்ற அச்சுவேலி வாசி ஒருவரை அடித்துப் பயமுறுத்திப் படுகாயங்கள் வருவித்தார்களென்று தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக் கெடுக்கப்பட்டபொழுது சாவகச்சேரி போலிஸ நீதிபதி எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு அவர்களின் விரலடையாளங்களை எடுத்துக்கொண்டு தீர்ப்புக் கூறவதற்கு தவணை போட்டிருக்கிறார். (ந-நி)

வழக்காளி குற்றவாளியானர்

சாவகச்சேரி, அக் 9

போக்கறுப்பைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை கைப்பெண் முத்தப் பிள்ளையும் ஆறுமுகம் கணபதிப் பிள்ளையும் கோவில் வயல வாசியாகிய சிவகுருநாதர் கந்தையா என்பவருக்குச் சொந்தமான ரூபா 45 பெறுமதியான ஒன்பது ஆடுகளைக் களவாடினர்கள் என்று தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கெடுக்கப்பட்ட பொழுது சாவகச்சேரி போலிஸ நீதிபதி வழக்காளி பொய் முறைப்பாடு கொண்டுவந்தார் என்று வழக்காளியையே குற்றவாளியாகக் கண்டு வழக்காளிக்கு ரூபா 50 குற்றமும் எதிரிகளுக்கு ஒவ்வொருவருக்கும் ரூபா 10 வழக்காளியைக் கொடுக்கும்படியும் மூடிக்குரிய செலவு ரூபா 5 கொடுக்கும் படியும் தீர்ப்பளித்தார். (ந-நி)

காந்தி ஜெயந்தி கொட்டியாக் கொல்லை

சென்ற 2-ம் தேதி உலகம் போற்றும் உத்தமர் காந்திஜியின் 79-ம் வருட ஜனன தினத்தை முன்னிட்டு, ஸ்ரீ தெண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தில் விசேஷ பிரார்த்தனை செய்யப்பட்டது.

அப்புத்தளை இலங்கை இந்தியன் காங்கிரஸ கமிட்டி

தலைவர் தெரிவு

அப்புத்தளை, அக். 7

அப்புத்தளைப்பகுதிஇலங்கை இந்தியன் காங்கிரஸ கமிட்டிக்கு திரு. ஏ. டி. செங்கமலை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் மந்திரி சபைக் கூட்டம்

லண்டன், அக். 9

திருத்தியமைக்கப்பட்ட பிரிட்டிஷ் மந்திரி சபையின் முதல் கூட்டம இன்று 65 நிமிடநேரம் நடைபெறறது. கூட்டம் முடியப்போகும் சமயம் மந்திரிசபையில் ஸ்தானமில்லாத யுத்த மந்திரி ஷின்வெல், கடற்படை மந்திரி லார்டு ஹாலுடனும் விமான மந்திரி ஆர்தர் ஹெண்டர்சனுடனும் வந்து கலந்துகொண்டார். (ராய்ட்டர்)

5000 அரசாங்க ஊழியர் வேலை நீக்கம

ஏதென்ஸ், அக் 9

பொருளாதாரச் சிக்கனத்தை முன்னிட்டு, அக்டோபர் 15-ம்தேதியன்று 5000 கிரேக்க அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வேலையினின்றும் விலக்கப்படுவர். வருடக்கடைசிக்குள் மற்றும் பதினயிரம உத்தியோகஸதர்கள் விலக்கப்படுவார்கள.

(ராய்ட்டர்)


லார்டு நபீல்டு 70-வது பிறந்ததினம்

லண்டன், அக். 9

பிரிட்டிஷ் மோட்டார் உற்பத்தி பிரபல முதலாளியான லார்டு நபீல்டின் 70-வதுபிறந்ததினக் கொண்டாட்டம் இன்று நடைபெற்றது. விருந்தில் அவர் பேசியபோது பிரிட்டிஷ் தொழிற்கட்சி சர்க்காரின் சிக்கனத் திட்டத்தைக் கண்டித்துப் பேசினர்.

கட்டிட வேலைக்கு
வேண்டிய எல்லா
விதமான சாமான்களும்
குறைந்த விலையில்
கிடைக்கும் இடம்
செட்டிநாட்
கார்ப்பொரேஷன் லிமிடட்
116/118 கெய்சர் வீதி,
கொழும்பு.

நவீன முறையில் தயார் செய்யப்பட்ட



சந்திரா பீடியை
வாங்கி உபயோகியுங்கள்.

- சிமந்தி:
  (இங்கிலீஷ் & பெல்ஜியம்)
- கை வாளிகள்:
  7 அங்குலம் துவக்கம் 14 அங்குலவரைக்கும்.
- வார்னிஷ்:
  இங்கிலீஷ் & இந்தியன்.
- ஜன்னல் கண்ணாடிகள்:
- தீந்தைகள்:
  28 முத்தல் தகர டின்களில் அடைக்கப்பட்டது நிறம்: பச்சை, தேக்கு, சொக்கலட் நிறங்களில்.
- முள்ளுக் கம்பி.
- பித்தளை, இரும்பு, ஸ்குரூப் ஆணிகள்.
- இரும்பு கூரைத் தகடுகள்:
  9'X3'X24 G

இன்னும் வேண்டிய கட்டிடச் சாமான் முதலியவைகளுக்கு, கடித மூலமாகவும் நேரிலும் விசாரித்துக்கொள்ளலாம்.

மெஸ்க்கன் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ்,
165, ஆர்மர் வீதி, கொழும்பு.
தெ-போன்:- 4461. தந்தி விலாசம்: "மெஸ்க்கன்"
தபால் பெட்டி 826.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 பேர் மீது கலகம் செய்ததாக வழக்கு

அறுவர் சிறு பிராயத்தினர்

கொழும்பு, அக். 11

தேர்தல் முடிவு வெளியாகி சிறிது நேரத்தில் தோல்வியுற்ற பார்லிமெண்டு அபேட்சகர் பி. சரவணமுத்துவின் வீட்டுக்கு வெளிப்புறத்திலே ஒரு பஸ்ஸிலே கற்கள், போத்தல்கள், பொல்லுகளைக் கொண்டு கலகம் விளைவித்தது சம்பந்தமாகவும், டபிள்யூ. ஏ. தர்மதாசா என்ற வெளிக்கடை வாசியை காயப்படுத்தியது சம்பந்தமாகவும் 18 பேர் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் அறுவர் சிறு பிராயத்தினர் என்று அறியப்படுகிறது.

மேற்படி வழக்கின் விசாரணை அக்டோபர் 31-க்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்திற்கு உணவுக் கப்பல்

சிக்கிரம் புறப்படுமாம்

கொழும்பு, அக். 11

5000 டன் மாவு, 200 டன் சீனி, உருளைக்கிழங்கு, பருப்பு வகைகள் ஆகியவற்றோடு சமீபத்தில் யாழ்ப்பாணத்திற்கு ஒரு கப்பல் கொழும்பிலிருந்து புறப்பட்டுச் செல்லும் என்று தெரிகிறது.

மேற்படி பொருட்கள் காங்கேசன்துறையில் இறக்கப்படும் என்றும் இறக்குமதியை மேற்பார்வை பார்க்க கொழும்பிலிருந்து எஸ். சங்கர சுவாமி டி. கணநாதன் என்பவர்கள் காங்கேசன்துறைபோவார்கள் என்றும் அறியப்படுகிறது.

27,040 ஏக்கர்பயிர்நாசம்; 222 பேர் மாண்டனர்

கடந்த வெள்ளப்பெருக்கின் புள்ளி விபரங்கள்:

கொழும்பு, அக். 11

கடந்துபோன வெள்ளப் பெருக்கின் காரணமாக 222 பேர் மாண்டுபோனதாக இப்போது கிடைக்கும் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. மொத்தம் 27,040 ஏக்கர் பயிர் சேதமடைந்ததாகவும், 7999 வீடுகள் முற்றாக நாசமாகியதோடு, மேலும் 2502 வீடுகள் பழுதடைந்ததாகவும் இதே புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரி பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்)

இன்னும் ஒரு கட்சியினர் 84 நோயாளருக்குப் படுக்கைகள் உள்ள கூடியரோக ஆஸ்பத்திரியை, பொது ஆஸ்பத்திரியாக்கும்படியும் கேட்டிருக்கிறார்களாம்.

யாழ்ப்பாணத்திலுள்ள கூடிய ரோக வார்ட்டில் இடமின்மையால் நோயாளர்களை காங்கேசன்துறை பொது ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி முன் சுகாதார மந்திரி திரு ஜோர்ஜ் ஈ. டி. சில்வா உத்தரவிட்டிருந்தார்.

பின்பு ஆசியா மகாநாட்டிற்குச் சென்ற மந்திரி திரு சில்வா டில்லியிலிருந்து நோயாளர்களை இப்படி யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறைக்கு அனுப்பவேண்டாமென உத்தரவிட்டார்.

இச்செயலைச் செய்வித்தது காங்கேசன்துறைக்கு பழைய அரசாங்க சபையில் பிரதிநிதியாகவிருந்த திரு எஸ். நடேசன் என்றும் கூறப்பட்டது.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் கீழ்க்கண்ட ஒரு தீர்மானத்தை சுகாதார மந்திரிக்கு அனுப்பியிருக்கின்றார்கள்

"காங்கேசன் துறை இராணுவ ஆஸ்பத்திரியை பழைய அரசாங்கசபை செய்துள்ள தீர்மானத்திற்கு மாறாக கூடியரோக ஆஸ்பத்திரியாகப் பாவிப்பதற்கு அரசினர் மீண்டும் முயற்சிசெய்து வருகிறார்களென்பதை அறிந்து இச்சபை பெரிதும் கவலைப்படுகின்றது. வடமாகாணத்திலுள்ள பொது ஜனங்களின் அபிப்பிராயத்துக்கு மாறாக அத்தகைய நடைமுறையைக் கையாளக்கூடாதென புதிய பாராளுமன்ற அங்கத்தவர்களையும் அரசாங்கவைத்தியப் பகுதி அதிகாரிகளையும் இச்சபை வேண்டிக்கொள்ளுகிறது.

டில்லியில் ஆசியா தொழில் மகாநாடு

இலங்கை பிரதிநிதிகளை அனுப்பும்

புதுடில்லி, அக். 10

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் ஆசியாப் பகுதி தொழில் மகாநாட்டை அக்டோபர் 27-ம் தேதி புதுடில்லியில் கூட்டுவதற்கு ஏற்பாடாகி வருகிறது. பிரதிநிதிகள் இந்திய சர்க்கார் விருந்தினராக இருப்பார்கள். மான்ட்ரீலிலும் ஜினிவாவிலுமுள்ள தலைமை ஆபீசுகளிலிருந்தும் சைவிலும் இந்தியாவிலுமுள்ள கிளை ஆபீசுகளிலிருந்தும் 40 உத்தியோகஸ்தர்கள் விஜயம் செய்வார்கள். கீழ்க் கண்ட நாடுகள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி வைப்பதாக அறிவித்திருக்கின்றன:— ஆஸ்திரேலியா, சைனு, பிரஞ்சு யூனியன், கம்போடியா, கொச்சின் சைனு, லாவோஸ், வியட்நாம், பிரஞ்சு இந்தியா, நியூ காலிடோனியா, பர்மா, இலங்கை, சிங்கப்பூர், இந்தியா, பிரிட்டன், மலேயா யூனியன், நெதர்லந்து யூனியன், நியூ ஸிலந்து, பாக்கிஸ்தான், சயாம் ஆகியவற்றோடு சமீபத்தில் ஆப்கானிஸ்தானம், பிலிப்பைன் நாடுகளிலிருந்து தகவல் வரவில்லை. அமெரிக்காவும் நேபாளமும் பார்வையாளர்களை அனுப்பிவைக்கும். (அ-பிரஸ)

இந்தியாவிலிருந்து இலங்கை வரும் பிரயாணிகள்

இந்திய சர்க்கார் அறிக்கை

புதுடில்லி, அக். 10

இந்திய சர்க்கார் அறிக்கை தெரிவிப்பதாவது:-கடல் மார்க்கமாவும் ஆகாய மார்க்கமாகவும் இந்தியாவிலிருந்து இலங்கை செல்லும் பிரயாணிகள் தாங்கள் 6 மாதத்திற்குள்ளாக 6 நாட்களுக்கு முன்னதாக வைசூரியைத் தடுக்க ஊசிபோட்டுகொண்ட சர்ட்டிபிகேட்டுடன் செல்லவேண்டும். அப்படிச் செய்தால் குவாரன்டைனில் தாமதமில்லாமல் இலங்கைக்குள் பிரவேசிக்க முடியும். அந்த சர்ட்டிபிகேட் இன்டர்நேஷனல் பாரத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். (அ-பிரஸ)

தலைமை ஆசிரியருக்கு விவாகரத்து அனுமதி

கொழும்பு, அக். 12

கொழும்பு கேரிக் கல்லூரித் தலைமை ஆசிரியர் தமது மனைவியான மெலிண்டா எல்வீர எவென்ஜலீனிடம் இருந்து விவாகரத்துக்கோரி ஓர் வழக்கு தொடர்ந்திருந்தார். இதற்குக் காரணமாக மேற்படி பெண் தமது மைத்துனர் ஒருவரின் குமாரரான ஜோசப் மாத்யூ ஜெயசிங்காவுடன் தவறுதலாக நடந்ததை கொண்டிருந்ததாக அவரால் கூறப்பட்டது. மேற்படி இரண்டாவது எதிரியான ஜோசப் மாத்யூ ஜெயசிங்காவடமிருந்து ரூ. 10,000 நஷ்டஈடு கோரப்பட்டது.

பிரஸ்தாப தம்பதிகள் 1926-ல் மணமுடித்ததாகவும் 12 வயது முதல் 18 வயது வரை உள்ள 4 குழந்தைகளுக்குப் பெற்றோர்களென்றும் சொல்லப்பட்டது. 1943-ல் மனைவியின் நடத்தை காரணமாக சச்சரவுகள் ஏற்பட்டு 1945-ல் அவள் தன்னை விட்டுப் பிரிந்து வாழ்வதாகவும் கணவனால் கூறப்பட்டது. விசாரணை முடிவில் விவாகரத்தை நீதிபதி அனுமதித்தார். அத்துடன் ரூ. 2500 இரண்டாவது எதிரியால் நஷ்டஈடு கொடுக்கப்படவேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

மார்பு நோய் ஆஸ்பத்திரிக்கு நூல் நிலையம்

கொழும்பு, அக். 11

ராகமமார்பு நோய் ஆஸ்பத்திரியில் நோயாளிகளின் உபயோகத்திற்காக ஓர் நூல் நிலையம் திறக்கப்பட்டிருக்கிறது. காலம் சென்ற சர் எஸ். ஏ. ஒபேசேகராவின் பேரப்பிள்ளை ஒருவரால் அது ஸ்தாபிக்கப்படடிருக்கிறது. அதன் பெயர் ஒபயசேகரா நூல் நிலையம் என்பதாகும்.

நமது ஜோஸியப் பகுதி:

ஐப்பசி மாதப் பலன்

[சுகன்யா எழுதுவது]

1947-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதி தொடக்கம் நவம்பர் மாதம் 15-ம் தேதி வரைக்கும் சூரியன் துலாராசியில் சஞ்சரிப்பார். இந்தக் காலம் சர்வஜித்து ஐப்பசி மாசமெனப்படும். துலாம் சூரியன் நீசவீடு. துலாராசியில் சூரிய னிருக்கும் காலங்களில் நீசச் செவ்வாயின் நோக்கும் பெறுகிறார்.

ஐப்பசி மாசத்தில் அதிக மழையும், வெள்ளத் தினால் அழிவுகளும், குளிர் மிகுதியும், பொது ஜனங்களுக்குள் இளர்ச்சிகளும், நெல் மலிதலும், தேங்காய், பழவகை, கிழங்குவகை, வெல்லம், பருத்தி, பால், நெய், பொன், வெள்ளி, பித்தளை, கடலை, கரும்பு, பயறு, சிறுதானியங்கள் சமிக்கும் ஊண் பொருட்கள் செழித்தலும், உணவுக் கட்டுப்பாடுகள் குறைதலும், புகையிலை உளுந்து, வெற்றிலை, இரும்பு, புளி முதலிய கறுப்புப் பொருட்கள் விலை யேறுதலும், கமத்தொழில், கைத்தொழில் விருத்தியும், தொழிலாளர் குழப்பங்களுமுண்டாம்.

ஐப்பசி மாசத்தில் இந்தியாவின் தொல்லைகளதிகரிக்கும். இந்தியாவுக்கும் அந்நிய நாடுகளின் தொல்லைகளதிகரிக்கும். உள் நாட்டுக் இளர்ச்சிகள் வரவரக் கூடும். இந்து முஸ்லிம் ஒற்றுமைகள் பாதிக்கப்படும்.

மத்திய கிழக்கு நாடுகளிலும் தொல்லைகளுண்டாகும். யூதர்களின் தொல்லைகளதிகரிக்கும். யூதர்களுக்கும் பிரித்தானியாவுக்கு மிடையில் பகைகளதிகரிக்கும் எகிப்துக்கும் பிரித்தானியாவுக்கும் மாறுன இளர்ச்சிகள் தோன்றும். ஐப்பசி மாசத்தில் எங்கும் இளர்ச்சிகளுண்டாகும்.

ஐப்பசி மாசத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையில் பல தொல்லைகள் தோன்றி மறையும். அமெரிக்காவுக்கும் ரஷியாவுக்குமிடையில் பகைகள் வளரும். பிரித்தானியா மந்திரி சபையில் கினையாப் பிரகாரமான சில கருமங்கள் நடைபெறும்.

ஐப்பசி மாசத்தில் பல பெரியார்களுக்கு ஜீவ ஆபத்துகளுண்டாம். தொழிலாளர் குழப்பங்கள் எங்கும் தலைகாட்டும்.

இந்த வார தினப்பலன்

ஞாயிறு. அக்டோபர் 12

இன்று எல்லாக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும் தோஷ தினம்.

சந்திர லக்னம்- மிதுனம், சிங்கம், துலாம், விருச்சிகம், கும்பம், மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் நற்பலனுண்டாம்.

திங்கள்: அக்டோபர் 13.

அமாவாசை விரதம். இன்று எல்லாக் கருமங்களுக்கும் அசுப தினம். இத்தினத்தில் நீரில் கவனமாயிருத்தல் வேண்டும்.

சந்திர லக்னம்-மேடம், கடகம், கன்னி, விருச்சிகம், தனுசு, மீன ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் சுகபலனுண்டாம்.

செவ்வாய்: அக்டோபர் 14.

நவராத்திரி ஆரம்பம் பொது கருமங்கள் ஆரம்பிப்பதற்கு பொது நாள்.

சந்திர லக்னம். மேடம், கடகம், கன்னி, விருச்சிகம், தனுசு, மீன ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில்ஜெயமுண்டாம்.

புதன்: அக்டோபர் 15

இன்று வியாபாரம் செய்தல், கொள்ளல் விற்றல், கொண்டாட்டங்களுக்கும் பொதுநாள்.

சந்திர லக்னம் மேடம், இடபம், சிங்கம், துலாம், தனுசு, மகர ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் முன்னேற்றமுண்டாம்.

வியாழன்: அக்டோபர் 16

இன்று பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும் மரவகை செடிவகை நடுவதற்கும் பொது நாள்.

சந்திர லக்னம். மேடம், இடபம், சிங்கம், துலாம், தனுசு, மகர ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் பணலாபமுண்டாம்.

வெள்ளி: அக்டோபர் 17

இன்று புதுக்கருமங்கள் ஆரம்பிப்பதற்கு அசுபதினம்.

சந்திர லக்னம். இடபம், மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்டராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் நன்மைப் பேறுண்டாம்.

சனி: அக்டோபர் 18. இன்று பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கு பொது நாள்.

சந்திர லக்னம். இடபம், மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் வெற்றிகளுண்டாம்.

காணமற்போன கப்பல் சிப்பந்தி

பௌத்த பிக்குவாகப் பிடிபட்டார்

'புத்தப்பிரிய தீரோ' என நாமம்

கொழும்பு, அக். 12

கொழும்புத் துறைமுகத்தில் தங்கிய ஓர் கப்பலிலிருந்து தப்பி ஓடிவிட்ட ஹரி பிரேட் டுஸ்காகளான்னை பவர் பிடிக்கப்பட்டு உதவி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டார். அவர் சந்தலங்காவை பௌத்த பிரிவேனையில் காஷாய உடை தரித்து பௌத்த பிக்குவின் தோற்றத்தில் காணப்பட்டார்.

25 வயது கப்ளான் டான்ஸ்கில் பிறந்தவர் என்றும் அவரது மூதாதைகள் பாளி, சமஸ்கிருத பண்டிதர்களென்றும் சொல்லப்பட்டது. அவரது மனைவியும், குழந்தைகளும் குண்டுமாரிக்கிரையாகி மரித்து விடவே அவரது உள்ளம் பௌத்த பிக்குவாகத் துடிதுடித்ததாகவும் அதன் பொருட்டு இலங்கை வர விரும்பியதாகவும் கூறப்பட்டது. கையில் பிரயாணத்திற்கு காசில்லாததால் அவர் கப்பற் சிப்பந்தியாகி இலங்கை வந்து சந்தலங்கா பிரிவேனையில் வியாழக்கிழமை காலை 10 மணிக்குக் காஷாயம் ஏற்றுக்கொண்டு துறவு பூண்டதாகவும் சொல்லப்பட்டது. அவரது துறவுப் பெயர் புத்தப் பிரிய தீரோவாகும்.

இது சம்பந்தமாக விசாரணை நவம்பர் 12-ம் தேதிக்கு ஒதுக்கி வைக்கப்பட்டது. எதிரி 1000 ரூபாய் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

மற்றுமிரு தேர்தல் ஆட்சேபனை மனுக்கள்

மாத்தளை, நாவலப்பிட்டி

கொழும்பு, அக். 11

பாராளுமன்றத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட சில பிரதிநிதிகளின் தேர்தல்களை ஆட்சேபித்து இதுவரை 13 மனுக்கள் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. இன்று மற்றும் இரு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதுடன் மொத்தம் இதுவரை 15 மனுக்கள் தாக்கலாயிருக்கின்றன.

இன்று நாவலப்பிட்டி பிரதிநிதி திரு கே. ராஜலிங்கத்தின் தேர்தலை ஆட்சேபித்தது தேர்தலில் பயமூறுத்தலும் உபசரித்தலும் நடைபெற்றதாகக் காரணங்காட்டி திரு. பி. ஏ. டேவிட் பெரேரா, சுப்ரீம் கோர்ட்டில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார்.

மாத்தளை பிரதிநிதி திரு. வி. பி. நாணயக்காராவின் தேர்தலை ஆட்சேபித்து, தேர்தலில் லஞ்சம், உபசரிப்பு, ஆள் மாறாட்டம் நடைபெற்றதாகக் காரணங்காட்டி திரு பி. எச். அலுவிஹாரா ஒரு மனுவைத் தாக்கல் செய்தார்.

செனெட் சபை குமாஸ்தா

கொழும்பு, அக். 12

சட்டக் காரியதரிசியின் பிரதம உதவியாளர் திரு. ஈ. வி. ஆர். சமரவிக்கிரம செனெட் சபைக் குமாஸ்தாவாக நியமனமாகலாம் என்று தெரிகிறது.

பட்டினி அல்லது பிச்சை

பிரிட்டனின் பரிதாப நிலை

உற்பத்தியைப் பெருக்க மந்திரி வேண்டுகோள்

லண்டன், அக். 10

ஓரளவு இருக்கும் இருப்பும் செலவாகியதுடன், பிரிட்டன் ஒன்று பட்டினி கிடக்க வேண்டும்; இன்றேல் பிச்சை எடுக்க வேண்டும் என்று இன்று பிரிட்டிஷ் பொருளாதார மந்திரி கிரிப்ஸ தொழிற்சாலைகளின் டைரக்டர்கள், மானேஜர்கள் அடங்கிய பொதுக் கூட்டத்தில் எச்சரித்தார். உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய போதிய சரக்குகள் இல்லையென்றும் அவர் கூறினார்.

அக்டோபர் 20-ம் தேதி ஆரம்பமாகும் பார்லிமெண்ட் கூட்டத்தில் பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி பிரிட்டனின் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பார். சாமான்கள் வாங்கும் வரி அதிகரிக்கப்படுமென்று தெரிகிறது.

உலக பாங்கு மகாநாட்டுக்கு விஜயம் செய்துவிட்டு ஐரோப்பிய சுற்றுப் பயணத்தில் ஒஸ்லோ நகர் வந்திருக்கும் பாங்க் தலைவர் மக்ளாய், பிரிட்டன் தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பித்துக்கொள்ளுமென்று தெரிவித்தார்.

லண்டனிலுள்ள இம்பீரியல் பொருளாதார கமிட்டி இனி காமன் வெல்த் (சாம்ராஜ்ய) பொருளாதாரக் கமிட்டி என்றழைக்கப்படும்.

200 நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் தலைவர்கள் இன்று கூடி உற்பத்தியைப் பெருக்க அதிக நேரம் வேலை செய்வதெனத் தீர்மானித்தார்கள்.

ட்ரூமன் பிரசாரம் தோல்வி

வாஷிங்டன், அக். 10

அமெரிக்க மக்கள் உணவு சிக்கனம் செய்ய வேண்டுமென்று ட்ரூமன் செய்துவரும் பிரசாரம் தோல்வியுறும் என்று அதிகாரிகள் அஞ்சுகின்றனர். ஜனாதிபதி கூறியபடி நாட்டிலுள்ள ஹோட்டல் காரர்கள் அனைவரும் மாமிசமில்லாத உணவு தினத்தை அனுஷ்டிக்கவில்லை.

(ராய்ட்டர்)

இலங்கை கொப்பரு மீது ஸ்திர தடை

கராச்சி, அக். 10

மலேயாள கொப்பரு, தேங்காய் எண்ணெய் மீது ஸ்திர சர்க்கார் தடையை நீக்கிவிட்டனர். ஆனால் இலங்கை கொப்பரு, தேங்காய் எண்ணெய் மீது விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படவில்லை. (அ-பிரஸ)

சுய அறிவுப் போட்டி நிர். 20

விசேஷ தீபாவளிப்

பரிசு ரூ. 3000-00

முடிவு தேதி 10-11-47

மதுரைத் தமிழ்ப் பேராதிகள், பவுண்டன் பேனாக்கள்

விசேஷ பரிசுகள்! அதிர்ஷ்டப் பரிசுகளும் உண்டு!!

கட்டணத்தில் விசேஷ சலுகை!!!

கூப்பன்களுக்கு எழுதுங்கள்; இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

விபரங்கட்கு:-

சுய அறிவுப் போட்டிக் காரியாலயம்,

தபால் பெட்டி 764,

கொழும்பு.

Phone: 3032 T'gram: "SHUYARIVU", Colombo

கட்டிடத்துக்கு தேவையான சிமந்தும் மற்றச் சாமான்கள் எல்லாம்

எங்களிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி,

No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,

புறக்கோட்டை, கொழும்பு.

டெலிபோன். 2029

டெலிகிராம். 'ENVAITLIN'

கிளை:- பெரியகடைத் தெரு,

யாழ்ப்பாணம், டெலிபோன்: 30.

உங்கள் இடங்களிலே — மங்கள கூற்றன்

மெய்கண்டான்

REGD: 7479

திருக்குறட் கலண்டர்

புதிய கிளேஸ் கடுதாசியில் அச்சிடப்பெற்றது.

1948-ம் வருட மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்	5-10-47 க்கு முன் ½ பங்கு முற்பணந் தூடன் கூடிய ஆடருக்கு 12 க்கு	100 க்கு	5-10-47 க்குப்பின் 1-11-47 க்கு முன் ½ பங்கு முற்பண ஆடருக்கு 12 க்கு	100 க்கு
No. 1. சிவப்பு	18-00	145-00	19-00	150-00
No. 1. கறுப்பு	16-50	130-00	17-60	135-00
முதுமொழிக் கலண்டர் No. 2.	8-50	65-00	9-00	70-00
No. 1. டயறி (1 பக்கம் 1 நாள்)	16-00	—	16-50	—
No. 2. டயறி (திருக்குறள் டயறி)	8-50	—	9-00	—

சில்லறை விலை: No. 1. சிவப்பு 1 க்கு 1-75
No 1. கறுப்பு ,, 1-55

இன்றே ஆர்டர் செய்யுங்கள் பிந்தினால் கிடைப்பதரிது.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை, மட்டுவில், சாவகச்சேரி.

கிரவுன் தியேட்டர்

ஸ்கின்னர்ஸ ரோடு மருதானை

இனசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்

சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்.

சித்ரா கலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு"

மகத்தான தமிழ் 4-வது படம் வாரம்

அடக்கு முறைகளுக்கு ஆட்பட்டிருந்தமக்களின் மீட்சிக்காகவும், தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைச் சித்தரிக்கும் படம்

மெட்ரோஸ் மெயில் புகழ் பாட்லிங் மணி புதிய நடிகை சுந்தரி மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்கனிக்கு அரைசார்ஜ்



சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 12-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org